Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-30 | 15-11-2004 | திங்கட்கிழமை | ஓசை -271




## "காலத்தை வென்ற தலைவர்" நூல் கனடாவில் சிறப்புற வெளியீடு

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் ஆளுமையின் பதிவான "காலத்தை வென்ற தலைவர்" நூல் வெளியீட்டு விழா கனடாவில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கனடா கந்தசாமி ஆலய மண்டபத்தில் இந்நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றுள்ளது. தமிழீழ தேசிய கொடியேற்றல், கனேடிய தேசியக்கொடியேற்றல், தாயக விடுதலைப்போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்கள், மக்களுக்கான அகவணக்கத்துடன் இவ்விழா ஆரம்பமாகி இடம் பெற்றுள்ளது. இதன் போது விடுதலை கானங்களுக்கான நடனம், கவியரங்கம், நூலிற்கான வெளியீட்டுரை, மதிப்புரையுடன் கனடா உலகத்தமிழ் இயக்கப் பொறுப்பாளர் நாவலன் இந்நூலினை வெளியிட்டு வைத்தார். ஐரோப்பிய நாட்டிலிருந்து கொண்டு செல்லப்பட்ட நூல்கள் அனைத்தும் முடிந்துவிட்டமையால் நிகழ்வில் கலந்து கொண்ட பலர் நூல் கிடைக்கமால் கவலையுடன் திரும்பியுள்ளனர்.

## சமாதானத்துக்கான ஆலோசனை சபையில் ஐக்கிய தேசியக் கட்சி பங்கேற்கலாம்

### - கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஆரூடம்

ஐக்கிய தேசிய கட்சி சனாதி பதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபையில் பங்கு கொள்ளக்கூடும் என தென்னிலங்கையின் அரசியல் தரப்புகள் தெரிவித்துள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தன்னாட்சி அதிகார சபை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் மாத்திரமே குறிப்பிட்ட சபையில் அங்கம் வகிக்கப்போவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்து வருகிறது. எனினும் அண்மையில் சனாதி பதிக்கும், எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் பின்னரும், சனாதிபதி இந்தியாவுக்கு சென்று வந்ததன் பின்னரும் ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன் தினம் இது தொடர்பில் மல்வத்த மகாநாயக்கரும், ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் (12ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ பவுசர் மோதி இளைஞன் பரிதாப மரணம்; சடலத்தை அகற்ற ராணுவம் முயன்றதால் கொந்தளிப்பு!

## மக்கள் மீது கண்ணீர்ப்புகைவீச்சு, தடியடி

(கொழகாமம்)

**கொழகாமம்–இராமாவில் பகுதியில் ஏ–9 வீதியில் சிறிலங்கா இராணுவத்தின் நீர்த்தாங்கி வண்டி மோதியதில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். இறந்த இவ் இளைஞனின் சடலத்தை மரணவிசாரணை முழவடைய முன்னர் இராணுவத்தினர் அகற்ற முயன்றதால் அதை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதால் அங்கு கொந்தளிப்பு நிலை உருவாகியது. இதைத்தொடர்ந்து அங்கு வந்த பொலிசார் பொதுமக்கள் மீது கண்ணீர்ப் புகை பிரயோகமும், தடியடியும் மேற்கொண்டதில் ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர்.**

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவரான வரதராஜ குருக்கள் அரிகர சர்மா (வயது - 24) எனும் இளைஞன் உந்துருளியில் இருந்து தனது சகோதரனை முகமாலைப் பகுதியில் இறக்கிவிட்டு வீடு திரும்பியுள்ளார். கண்டி வீதியூடாக வந்து கொண்டிருந்த அவரை கொடிகாமம் நகரப் பகுதியிலிருந்து சற்றுத் தூரத்திலுள்ள இராமாவில் கோவிலுக்கருகில் சாவகச்சேரிப் பக்கமாக இருந்து வந்த இராணுவ வாகனமொன்று மோதியுள்ளது.

அப்பகுதியிலுள்ள 53ஆவது இராணுவ படைத்தளத்திற்கு குடிநீர் விநியோகிக்கும் குறித்த தண்ணீர் தாங்கி வாகனம் விபத்தை (12ஆம் பக்கம் பார்க்க)





ஏ-9 வீதிக்குக் குறுக்கே பேருந்து ஒன்று நிறுத்தப்பட்டுள்ளதுடன் வீதியில் ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளதையும் பொலிசாருக்கும் மக்களுக்குமிடையே மோதல் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

பத்திரிகை சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் சொல்லிக் கொள்ளுகின்ற அதேநேரத்தினில், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் எந்தவொரு மாற்றமுமின்றித் தொடர்கின்றது என வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது அன்றாடப் பணிகளான சுயாதீனமான செய்தி சேகரிப்பிலும், அச்செய்திகளை வெளியிடுவதிலும் தமிழ் ஊடகவியலாளர்களிற்குள்ள நெருக்கடிகள் மாற்றமேதுமின்றியே இருக்கின்றன.

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எதிர்வரும் காலங்களினில் அவ்வாறான அசம்பாவிதங்கள் இடம் பெறாதென உறுதி கூறப்படுகின்றது. ஆனால், அவ் உறுதி மொழிகள் என்றுமே உரிய தரப்புகளால் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இந்நிலையில், நேற்றைய தினம் தென்மராட்சியின் கொடிகாமம் பகுதியினில் இடம்பெற்ற அசம்பாவிதங் (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத் தீர்வுக்கும் தயார் சண்டைக்கும் நாம் ஆயத்தம்

### - அமைச்சர் அனுராபண்டார நாயக்க

சமாதான முறையில் அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தாம் தயாராகவிருக்கின்றோம். அதே நேரம் அடிபிடிக்கு வந்தால் அதற்குத தயார் என அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

நேற்று மாலை பொலனறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து 6 வருடங்களுக்கு பதவியிலிருக்கும். இதற்கு மேலதிகமாக மேலும் 6 வருடங்கள் பதவிக்கு வரும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சமாதான வழிமுறைகள் மூலம் அதிகாரத்தை பகிர்வு ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும். அரசிற்கு யுத்தம் செய்ய வேண்டிய தேவை இல்லை. சமாதான முறையில் அதிகாரப் பகிர்வு இடம்பெறும் பொழுது சிங்களவர்களோ, முஸ்லிம்களோ கைவிடப்பட மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். தெற்கு அரசியல் பற்றி குறிப்பிட்ட அவர், ஐக்கிய தேசிய கட்சியில் பெரிய, நடுத்தர, சிறிய வகை கள்வர்கள் இருக்கின்றார்கள். ரணில் விக்கிரமசிங்க முதல் ரவி கருணாநாயக்கா வரை இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்லும் எதிர் வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருப்பார். நீதித்துறையை அவமதித்த குற்றத்திற்காக உயர் நீதிமன்றம் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சமநிலையின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும்

### – சகவாழ்வு அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க

போர் நிறுத்த உடன்படிக்கை இரு தரப்பு இராணுவ சமநிலையின் அடிப்படையில் கைச்சாதிடப்பட்டுள்ளதால் அந்த அடிப்படையில் தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற வேண்டும் என சகவாழ்வு அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்று மாலை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் சமாதானத்திற்கான ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்த கருத்தரங்கொன்றில் உரையாற்றிய அவர், விடுதலைப் புலிகளின் கட்டமைப்புகள் எற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். 1956 முதல் ஆளும் கட்சி எடுக்கும் முடிவை எதிர்க் கட்சி எதிர்ப்பது இந்த நாட்டிற்கு ஒரு சாபக் கேடு. 1956இல் பண்டா செல்வா ஒப்பந்தம் முதல் தடவையாக எதிர்க் கட்சியினால் எதிர்க்கப்பட்டதையடுத்து கைவிடப்பட்டது. இறுதியாக 2000ஆம் ஆண்டு புதிய அரசியல் வரைபொன்று கொண்டு வரப்பட்ட போது பாராளுமன்றத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### அறிவித்தல்

அப்பன் இரும்புத் தொழிலகம், டிப்போ வீதி கிளிநொச்சி (மாவீரர் துயிலும் இல்லவீதி) சுருக்கு கேற் மற்றும் சகல விதமான கேற் வகைகள் யன்னல் கிறில் றைஸ் போன்றவை செய்து கொடுக்கப்படும். (சி-10756)

### தவறிவிட்டது

7ஆம் வட்டாரம், சிவன்நகர், புதுக்குடியிருப்பு எனும் முகவரியைக் கொண்ட சே.தேவநாயகம் ஆகிய எனது ஓட்டுனர் லைசன்ஸ் (ரெம்பறி) தேசிய அ.அட்டை, நிரந்தர பயணஅட்டை என முக்கிய ஆவணங்கள் பேஸ் என்பன 10.11.2004 அன்று சிலாவத்தைக்கும், முல்லைத்தீவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.போ.கழகத்தில், அல்லது காவல் பணிமனையில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-10515)


# எம் விடிவிற்காக தம்மை விதையாக்கிய மாவீரச்செல்வங்களை நினைவு கூருவோம்

## - யாழ். பல்கலை சமூகம் அறைகூவல்

தமிழ் மக்களாகிய எமக்கு நிம்மதியான, நிரந்தரமான விடிவிற்காக தங்கள் உயிர்களை மண்ணில் விதைகளாக்கிய மாவீரச் செல்வங்களை நினைவு கூரும் மாவீரர் நாளை வழமை போல மிகவும் உணர்வுபூர்வமாக பல்கலைக்கழக சமூகமாகிய நாம் கொண்டாடுவோம் எனப் பல்கலைக்கழகம் விடுத்துள்ள அறைகூவலில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும், இந்த மண்ணிற்காக, இந்த மண்ணில் வாழ்கின்ற மக்களின் நிம்மதியான வாழ்விற்காக, எதிரியின் அடக்கு முறைக்கரங்களுக்குள் சிக்குண்டு அடங்கி ஒடுங்கி வாழ்கின்ற வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக மண்ணின் விடியலுக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்கள் தான் இந்த மாவீரர்கள். இன்று உலக அரங்கில் எமது இனம் பேசப்படுவதற்கும் உலகெங்கும் வாழும் தமிழ் இனம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும் சிங்கள இனவெறி அரசிற்கு சம பலமாக போர் முனைகளில் தமிழர் சேனை வளர்ந்து நிற்பதற்கும் இந்த உத்தமர்களின் புனித தியாகம் தான் காரணம். எமது ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு படிக்கற்களாகவும், எமது மக்களிற்கு காவல் தெய்வங்களாகவும் இன்று கல்லறைக்குள் உறங்கும் காவிய நாயகர்களாக விளங்குகின்றார்கள் எனவே இந்த புனிதர்களைப் போற்றுகின்ற இந்த நாளினை மிகவும் உணர்வு பூர்வமாகவும் உணர்வெழுச்சியுடனும் நினைவு கூர அனைவரும் தயாராகுவோம். தமிழ் மக்களின் ஆன்மாவாக தமிழர் படையை மிகவும் தீர்க்கதரிசனமான நெறிப்படுத்தலின் ஊடாக பலம்மிக்க சிங்கள அரசினால் அசைக்க முடியாத அளவிற்கு வளர்த்து தமிழர்களின் சூரியனாக விளங்கும் எமது தேசியத் தலை வரின் வழியில் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கும்.

அந்த விடியலுக்காக எமது தலைவனுக்கு பக்க பலமாக என்றும் உழைத்து தேசத்தின் விடியலை வேகப்படுத்துபவர்களாக நாம் இருப்பதுடன் வரலாற்று நாயகர்களைப் போற்றும் இந்த நாளையும் சிறப்பு மிக்க நாளாக அனுஷ்டிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறைகூவலை பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்பன கூட்டாக விடுத்துள்ளன. (36)

# இராணுவம்-பொலிசாரின் அடாவடிக்கு தமிழ்த் தேசிய வி.க. கண்டனம்

கொடிகாமப் பகுதியில் கட்டுப்பாடின்றி ஓடிய இராணுவத்தின் வாகனமானது வீதியில் சென்ற இளைஞனை இடித்துக் கொலை செய்துள்ளது. அடிக்கடி மிகவேகமாகச் செல்லும் இராணுவ வாகனங்களாலும், வீதியில் இரு மருங்குகளிலும் இராணுவத்தின் காவலரண் அமைத்து இருப்பதனாலும் குடாநாட்டில் வீதி விபத்துக்கள் இராணுவத்தினராலேயே இடம்பெற்று வருவது மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும் என தமிழ்த் தேசிய விழிப் புனர்வுக்கழகம் தெரிவித்துள்ளது.

நேற்றும் அவ்வாறான ஒரு சம்பவமே இடம்பெற்றுள்ளது. இதனால் விரக்தியுற்ற மக்கள் தமது எதிர்ப்பினைக் காட்ட முற்பட்டவேளை இராணுவத்தினரும் பொலிசாரும் என நூற்றுக்கணக்கானோர் ஒன்று கூடி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இராணுவத்தினர் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பின் காரணமாகவே மக்கள் தமது எதிர்ப்பினைக் காட்ட முற்பட்டனர். இராணுவமும் தமது வழமையான பாணியில் தமிழ் மக்கள் என்ற இனவெறியுடனும், இனத்துவேசத்துடனும் தமது காட்டுமிராண்டித்தனத்தை மீண்டும் ஒரு முறை தமிழ் மண்ணில் படம் போட்டுக்காட்டியுள்ளது.

மீண்டும் ஒரு யுத்தத்தை உருவாக்குவதன் மூலம் தான் செய்ய எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையின் ஓர் வடிவமாகவே இச்சம்பவங்கள் காணப்படுகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும்கூட தங்களுடைய வீடுகளில், வயல் நிலங்களில் இருந்து இராணுவம் வெளியேறாததால் ஆத்திரமுற்றிருந்த மக்கள் தமது இராணுவத்தின் மீதான எதிர்ப்புக்களைக் காட்ட முற்பட்டமையானது, யதார்த்தமானது என்பதனை சிறிலங்கா இராணுவம் புரிந்து கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் மக்களை இனரீதியாக அடக்க முற்படுவதை இராணுவம் நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதனையே இச்சம்பவம் கோடிட்டுக் காட்டுகிறது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

# தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாண கிளை பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாணக்கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நேற்றுப் பகல் 10.45 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாணக்கிளையின் தலைவர் க.செ.சுவர்ணராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தின் முதன்மை விருந்தினராக கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த பொறுப்பாளர் இளஞ்சேரன் மற்றும் இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க கொழும்பு மாவட்ட உப தலைவர் சால்யகளுவாராச்சி, மகிந்த ஜெலதுங்க ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். மேற்படி கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 65 நிர்மாணிகள் கலந்து கொண்டனர்.

மகாவலி சிமெந்து ஸ்தாபனத்தின் அனுசரணையுடனும் டிமோ நிறுவனத்தின் உப அனுசரணையுடனும் மேற்படி நிர்மாணிகள் சங்கப் பொதுக்கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி. தொழிநுட்பக் கல்லூரியில் வீதி ஒழுங்கு குறித்த கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வீதி ஒழுங்கு விதிமுறை தொடர்பாகவும், வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் நேற்று காலை 11.30 மணி தொடக்கம் 1.30 வரை தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிசிவகுமாரன், மற்றும் அதன் துணைப்பொறுப்பாளர் ந.ஜீவானந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

இதில் பாதசாரிகள், துவிச்சக் கரவண்டி ஓட்டுனர்கள், சாரதிகள் வீதியில் ஒழுங்கு விதிகளை பின்பற்றுவது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

இந் நிகழ்விற்கு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தலைமை தாங்க அங்கு பயின்று வரும் 75இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (கு.தீ)

# மதகினுள் வீழ்ந்து வயோதிபர் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

இரவில் வீதியால் சென்ற வயோதிபர் ஒருவர் வீதியருகில் இருந்த மதகு ஒன்றினுள் விழுந்து மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி அக்கராயனில் இடம்பெற்றுள்ளது.

மதகிற்குள் வயோதிபரின் சடலம் ஒன்று இருப்பதாக நேற்று அதிகாலை கிடைத்த தகவலினையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த அக்கராயன் காவல்துறையினர் மதகினுள் இருந்து சடலத்தினை மீட்டனர். சடலம் பரிசோதனையின் பொருட்டு கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கு சடலப் பரிசோதனை இடம்பெற்றது.

மாவட்ட வைத்தியசாலையில் வைத்து விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி விபத்து மரணமென தீர்ப்பு வழங்கினார்.(சோ)

# வவுனியா நகர கழிவகற்றல் தொடர்பான கலந்துரையாடல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா நகரில் உள்ள கழிவுகளை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா நகரில் இருந்து அகற்றப்படும் கழிவுகள் பம்பை மடுக்காட்டுப் பகுதியில் திறந்த வெளியில் கொட்டப்பட்டதனால் ஏற்பட்ட சூழல் மாசடைதலைத் தொடர்ந்து அப்பகுதியில் கழிவுகளைக்கொட்ட மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். எனினும் பாராளு மன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் தலையீட்டால் அப்பகுதியில் சனவரி மாதம் வரை கழிவுகளைக் கொட்ட அப்பகுதி மக்கள் சம்மதித்துள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதியில் பாதுகாப்பான முறையில் கழிவுகளைக் கொட்டுவது தொடர்பாகவும், சனவரிக்குப்பின் எவ்வாறான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் ஆராயும் நோக்குடனேயே இக்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதில் கிராமிய சுற்றாடல் குழு உறுப்பினர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா அரச அதிபர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.(10)

# புலிகள்–கண்காணிப்புக் குழுவினர் மன்னாரில் சந்தித்துப் பேச்சு

(மன்னார்)

அண்மையில் மன்னார் அரசியல் துறையினருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே சந்திப்பொன்று போர் நிறுத்தக் குழுவினரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் சமாதான செயலக இணைப்பாளர், மன்னார் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி மேம்பாட்டுக் குழுபொறுப்பாளர், போர் நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் எதிர்வரும் மாவீரர் தினத்தில் உயிலங்குளம் மடு வீதி பாதைகளை 24 மணி நேரமும் மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட போதிலும் அதிகாலை 3.00 மணி முதல் திறந்து வைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அத்துடன் மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பாகவும், சில ஏற்பாடுகள் செய்யவும் கலந்துரையாடப்பட்டது(மி)

# முல்லைத்தீவில் மக்கள் வெள்ளத்தால் இடப்பெயர்வு

முல்லைத்தீவில் மக்கள் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்து மீனவர் ஓய்வு விடுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். வட்டுவாகல் கிராமத்தில் சுமார் 50 குடும்பங்களும், செல்வபுரம் கிராமத்தில் 100 குடும்பங்களும், கள்ளப்பாடு பிரதேசத்தில் 100இற்கு மேற்பட்ட குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றமையால் மண் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளது. இதனாலேயே இம் மக்கள் அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்ட மீனவர் ஓய்வு விடுதியில் தங்கியுள்ளனர். செல்வபுரத்தில் மட்டும் இரு நாள் உணவை முல்லை மாவட்டம் நலன்புரி சங்கம் வழங்கியுள்ளது. வட்டுவாகல் கிராமத்தில் சுமார் 5நாட்கள் தங்கியுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட வில்லை என மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் கள்ளப்பாடு கிராமத்தில் வெள்ளம் நின்ற போது மக்கள் பரண் கட்டியிருப்பதை அவதானிக்க முடிந்தது. முள்ளிவாய்க்கால் மேற்கு கிராமங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கேப்பாப் புலவில் புலப்பிலவு எனும் புதிதாக குடியமர்ந்த கிராமத்தில் 68 குடும்பம் வெள்ளத்தால் மிகவும் பாதிப்புக்குள்ளானதென்பது குறிப்பிடத்தக்கது. (20)

# வவுனியா பொலிஸ் நிலைய காவலரண் புனரமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பொலிஸ் நிலைய காவலரண் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. இதன் மூலம் இப் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகின்றது.

புல்டோசர் மூலம் இப்புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முட்கம்பி வேலிகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று பூந்தோட்டத்தில் புதிய பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்படுகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் புதிய காவலரண் அமைபபது ஒரு யுத்த நிறுத்த மீறலாக கருதப்பட்டாலும் அதனையும் பொருட்படுத்தாது பொலிசார் இப்புதிய காவலரணை அமைத்து வருகின்றனர். (10)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சேமமடுவில் அணைக்கட்டு அமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா மாவட்டகிளையினால் சேமமடுக் குளத்தில் அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. சேமமடு குளத்திற்கு முதலியாற்றில் இருந்து 1.5 கிலோ மீற்றர் நீளமான அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இக் குளத்திற்கு அதிகமான நீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இக்குளத்தின் கீழ் 600 ஏக்கர் நிலப்பரப்பான வயல் உள்ளது. இங்கு 200 பயனாளிகள் பயன் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

டி.ஆர்.சி. நிறுவனத்தின் நிதியுதவியுடனும், உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடனும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் வேலைத் திட்டத்தின் மூலம் எதிர் வரும் காலங்களில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறையை தீர்த்து வைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (10)

# பலூஜாவில் பெரும் மனிதாபிமான நெருக்கடி உதவிகளின்றி அப்பாவி மக்கள் பரிதவிப்பு!

## -வெளியாகும் தகவல்களால் அதிர்ச்சி

(பாக்தாத்)

**ஈராக்கின் பலூஜா நகரில் பெரும் மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பகுதிக்குள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவொன்று பிரவேசித்துள்ள போதிலும் அதன் சுதந்திர நடமாட்டத்திற்கு அமெரிக்கப் படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.**

ஈராக்கின் பலூஜா நகரில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து வரும் தீவிர தாக்குதல் காரணமாக முதல் தடவையாக நிவாரணப் பொருட்களுடன் செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் பலூஜா நகரைச் சென்றடைந்துள்ளன.

மொத்தமாக 5 ட்ரக் வண்டிகளில் பொருட்களைக் கொண்டு சென்றிருப்பதாகவும், 3அம்பியுலன்ஸ் வண்டிகளும் சென்றிருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஷிர்தவூஸ் தெரிவித்துள்ளார்.

ஆயினும் நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதற்கு அமெரிக்கப் படையினர் அனுமதி மறுத்துள்ளதாக நிவாரண நிறுவனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். உணவுப் பொருட்கள் மருந்துகள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு 05 லொறிகளும், 03 அம்பியுலன்சுகளும் நகரின் வைத்தியசாலையை சென்றடைந்துள்ளன. அதற்கு அப்பால் செல்ல வேண்டாமென கூறப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இவ் வைத்தியசாலை நகரின் பிரதான பகுதியில் இருந்து தொடர்ந்து துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது. மக்கள் வீடுகளில் குடிநீரும் போதியளவு உணவும் இன்றி கஷ்டப்படுகிறார்களென நிவாரண நிறுவன அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்லாயிரக்கணக்கானோர் பலூஜா நகரில் இருந்து வெளியேறியுள்ள போதிலும் இன்னும் ஆயிரக்கணக்கானோர் அங்கு உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொய்ட்டர் செய்திஸ்தாபனம் வெளியிட்டுள்ள தகவலில் பலூஜாவில் உள்ள ஒருவர் தொலைபேசியில் அயலவருடன் உரையாடுகையில் எமது நிலமை மிகவும் கடினம் எமக்கு உணவு நீர் இல்லை எனது 7 குழந்தைகளும் வயிற்றோட்டத்தால் பீடிக்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தை காயப்பட்டுள்ளது. அதனால் இரத்தப்போக்கு அதிகமாக உள்ளது. அவருக்கு என்னால் உதவி செய்ய முடியாதுள்ளது என்று கூறியுள்ளார்.

மேலும் ஒருவர் கூறுகையில் எனது வீதியில் அமெரிக்கப்படையினரும் ஈராக்கியத் தேசியப் படையினரும் நிற்கின்றார்கள். இவ் வீதியில் இறந்தவர்களின் உடல்கள் நிறைந்துள்ளன என்று கூறினார். மொகமட் அலி சல்லால் என்ற 65 வயதான ரக்வண்டிச் சாரதி கூறுகையில் வீதியில் இறந்தவர்களின் உடல்கள் கிடப்பதாகவும் அவற்றின் மேல் டாங்கிகள் செல்வதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், படையினர் உள்ளூர் மசூதிகளுக்கு மக்களை செல்லும்படி ஒலிபெருக்கியில் அறிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவர்கள் வயோதிபர்களைச் செல்ல அனுமதிப்பதாகவும் இளைஞர்களைத் தடுப்பதாகவும் குறிப்பிட்டார். கிட்டத்தட்ட 10000 இடம்பெயர்ந்தவர்கள் அயலில் உள்ள நகர்களான அமிர்யா, கபாளியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## பௌத்த துறவி பலி!

(பாங்கொக்)

தாய்லாந்தில் முஸ்லிம்கள் பெருமளவு வாழும் தென்பகுதியில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பௌத்த துறவி ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஒரு குழந்தை உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர்.



அமெரிக்கப் படைகள் பலூஜாவில் நேற்று நடத்திய தாக்குதலில் காயமுற்ற சிறுமியொருவர் வைத்தியசாலைக் கட்டிலில் விளையாட்டுப் பொருளுடன்.

# இரட்டைக் குழந்தைகளுக்கு யசீர் அரபாத் பெயர் சூட்டல்

(ரமல்லா)

மறைந்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் உடல் ரமல்லா நகரில் அடக்கம் செய்யப்பட்டது. அவர் மரணம் அடைந்த நாளில் காஸா நகரில் சபராஜெசன் என்ற பெண் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டார். தனக்கு ஆண் குழந்தை பிறந்தால் அந்தக்குழந்தைக்கு யசீர் அரபாத் என்று பெயர் வைக்க வேண்டும் என்று தனது கணவர் ரபீக்கிடம் விருப்பத்தைத் தெரிவித்து இருந்தார்.

பிரசவத்தின் போது தான் அந்தத் தம்பதிகளுக்கு இரட்டை ஆண் குழந்தை பிறந்தது தெரிய வந்தது. அந்தத் தம்பதியினர் இரண்டு குழந்தைகளுக்குமே யசீர் அரபாத்தின் பெயரை வைத்து விட்டனர். ஒரு குழந்தையின் பெயர் யசீர், இன்னொரு குழ்ந்தையின் பெயர் அரபாத்



ஈராக்கின் கிர்குக் நகரில் உள்ள எண்ணெய்க் குழாய் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் எண்ணெய்க் குழாய் தீப்பிடித்து எரிகிறது. இந்த எண்ணெய்க் குழாய் மூலம் துருக்கி நாட்டுக்குத் தினமும் 5 இலட்சம் பரல் எண்ணெய் செல்வது தடைப்பட்டுள்ளது.

# ஐவரிக்கோஸ்டில் நெருக்கடி அதிகரிப்பு வெளிநாட்டினர் தொடர்ந்து வெளியேற்றம்

## –இராணுவத் தளபதியும் திடீர் மாற்றம்

ஐவரிக்கோஸ்டின் சனாதிபதி லோரன்ஸ் தமது இராணுவத் தளபதியைப் பதவி நீக்கம் செய்துள்ளார். இவருக்குப் பதிலாக முன்னாள் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த கேணல் பிலிப்பே நியமிக்கப்பட்டிருப்பதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஐவரிக்கோஸ்டில் வாழ்ந்து வரும் வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றார்கள். ஏற்கனவே 750 பேர் தலைநகர் அபிட்ஜானில் இருந்து நேற்று முன்தினம் வெளியேறியதாகவும் மேலும் பல எண்ணிக்கையானோர் தத்தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்காக விமானநிலையத்திற்கு வருவதாகவும் ராயட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸையும் ஏனைய நாடுகளையும் சேர்ந்த 5 ஆயிரம் மக்கள் ஐவரிக்கோஸ்டில் இருந்து வெளியேறியுள்ளார்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த 470 தொழிலாளர்கள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த 200 அதிகாரிகள் ஆகியோரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

பிரான்ஸ் சனாதிபதி ஜக்சிராக் கருத்து வெளியிடும் பொழுது ஐவரிக்கோஸ்டில் வாழும் பிரஞ்சுப் பிரஜைகளுக்கும் ஏனைய வெளிநாட்டவர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களையும் வன்செயல்களையும் தீவிரமாக கண்டித்துள்ளார்.

15 ஆயிரத்திற்கும் அதிகமான பிரஞ்சு பிரஜைகள் 100 வருடங்களுக்கு மேல் ஐவரிக்கோஸ்டில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பலஸ்தீனத்தின் ஹெப்ரோன் நகரில் காவல் கடமையிலீடுபட்டுள்ள இஸ்ரேலிய படை வீரர்கள்..

# பலஸ்தீன மக்களுக்கு தனிநாடு என் ஆட்சிக்காலத்துள் கிடைக்கும்

## -அமெரிக்க சனாதிபதி வாக்குறுதி

எனது ஆட்சிக் காலத்துக்குள் பலஸ்தீன மக்களுக்கு தனிநாடு கிடைத்து விடும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் வாக்குறுதி அளித்துள்ளார்.

வோஷிங்டனில் சனாதிபதி புஷ்சும், இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயரும் பலஸ்தீனப் பிரச்சினை குறித்து கடந்த வெள்ளியன்று முக்கிய ஆலோசனை நடத்தினர். இதன் பின்னர் இரு தலைவர்களும் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர்.

அப்போது பேசிய சனாதிபதி புஷ் எனது ஆட்சிக் காலத்திற்குள் பலஸ்தீன மக்களுக்கு தனிநாடு கிடைத்து விடும் என்று வாக்குறுதி அளித்தார். இங்கிலாந்துப் பிரதமர் ரொனிபிளேயர் கூறுகையில் பலஸ்தீனம் தனிநாடு உருவாக இங்கிலாந்து முழு ஆதரவு அளிக்கும் என்று தெரிவித்தார்.

1967 ஆம் ஆண்டில் நடந்த போரின் போது பலஸ்தீனத்தின் காஸா மற்றும் மேற்குக்கரைப் பகுதிகளை இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியது. அந்தப் பகுதிகளை ஒருங்கிணைந்து தனி பலஸ்தீன நாட்டை உருவாக்க வேண்டும் என்று அரபாத் விரும்பினார். ஆனால் அவரது கனவு அவர் வாழ்ந்த காலத்தில் நிறைவேறவில்லை.

இஸ்ரேல் அரசுடன் அரபாத் நடத்திய அமைதிப் பேச்சு வார்த்தை 2000 ஆம் ஆண்டு தோல்வியில் முடிந்தது. அதன் பின்னர் அரபாத்தை இஸ்ரேல் அரசு தீவிரவாதியாக அறிவித்து அவரது கடைசிக் காலம் வரை ரமல்லாவில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் அவரை வைத்திருந்தது.

# அமைதியாக பரிகாரம் காண சீனா வலியுறுத்து

ஜப்பானிய கடற்பரப்பினுள் சீன அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று ஊடுருவியதாக ஜப்பான் முறையிட்டுள்ளதைத் தொடர்ந்து சீனாவும், ஜப்பானும் அமைதியான முறையில் பரிகாரம் காணவேண்டுமென ஜப்பானிலுள்ள சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஜப்பான் இது தொடர்பாக சீனா மன்னிப்புக் கோர வேண்டுமென கேட்டுள்ளது. ஜப்ப ன் தனது நாட்டிலுள்ள சிரேஷ்ட சீன ராஜதந்திரியை வரவழைத்துத் தனது கடற்பிரதேசத்தில் இவ்வார முற்பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று காணப்பட்டதைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமாக தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. நீர்மூழ்கிக் கப்பலின் வகையைக் கொண்டும், அது வந்த திசையைக்கொண்டும் அது நிச்சயம் சீன நீர்மூழ்கிக் கப்பல் எனக் கூறமுடியுமென ஜப்பான் இதற்கு முன்னர் தெரிவித்திருக்கிறது. ஐந்து வருடங்களின் பின்னர் முதற்தடவையாக காணப்பட்ட இந் நீர்மூழ்கிக்கப்பலை விரட்டும் நோக் கில் ஜப்பானிய கடற்படை உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சீனாவிற்கும், ஜப்பானுக்குமிடையே முறுகல் நிலை தோன்றுகின்ற இவ்வேளை இச்சம்பவம் பதற்ற நிலையை மேலும் அதிகரிக்கச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒவ்வொரு இனத்தின் தனித்துவமும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்

## -திருமலையில் இப்தார் நிகழ்வில் சம்பந்தன் உரை

**ஒரு இனத்தை இன்னொரு இனம் அடக்கியாள முடியாது. ஒவ்வொரு இனத்தின் தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் பாரம்பரிய பிரதேசம் காப்பாற்றப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக்குழுவின் தலைவரும், திருகோண மலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை மாலை திருகோணமலை முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசலில் அமைந்துள்ள அல்ஹுதா ஹிப்ழ் மத்ரஸாவில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் பங்குபற்றிப் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மூத்த சட்டத்தரணி ஓ.எல்.எம். இஸ்மாயில் இந்நிகழ்வுக்குத் தலைமைவகித்தார். பள்ளிவாசல் நிர்வாகம் சமுதாய நம்பிக்கை நிதியம், திருகோணமலை ஜனாஸா நலன்புரிச்சங்கம் ஆகியன இந் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தொடர்ந்து பேசும் போது, பலஸ்தீன மக்களுக்கென தனிநாடு அமைய வேண்டும். போராடி வந்த விடுதலை இயக்கத் தலைவர் யசீர்அரபாத் மறைந்த தினத்தில் நாம் கூடியிருக்கின்றோம். அரபாத்தின் மறைவு பலஸ்தீன மக்களுக்குப் பேரிழப்பாகும். சுதந்திர பலஸ்தீன நாடு உருவாக்கப்படும் நிலையை ஏற்படுத்தி வைத்த பின்னரே யசீர் அரபாத் மறைந்தார். உலகில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமானால் பலஸ்தீன மக்களுக்கு சுதந்திர நாடு கிடைக்க வேண்டும் என்பதை உணர்த்தியவர் அரபாத் என்று குறிப்பிட்டார்.

மறுபடியும் யுத்தம் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. யுத்த நிலைக்கு நாம் மீண்டும் திரும்பிப் போகக் கூடாது. நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு மக்கள் காத்திருக்கின்றனர். விரைவில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்துணர்வுடனும் இணக்கப்பாட்டுடனும் வாழவேண்டும். வடக்கு கிழக்கில் முஸ்லிம்-தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தேயாக வேண்டும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். விடுதலைப்புலிகளின் திருமலைமாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் புரட்சி பேசும்போது, "விடுதலைப்புலிப் போராளிகள் தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காக போராடுகின்றனர். போராளிகள் ஆளப்போவதில்லை. எதிர்கால சந்ததியினர்தான் சுதந்திர மண்ணை ஆளப் போகின்றார்கள். தமிழ்-முஸ்லிம் உறவு வலுப்பட வேண்டும். இன்றைய நிகழ்வு எனது வாழ்வில் மறக்க முடியாத நாளாக அமைந்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் திருமலைமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலைத் தலைவர் டிக்பின் ஆக்நெஸ், மேலதிக அரச அதிபர் என்.சிங்கராயர், ஜனாஸா நலன்புரிச்சங்கத்தின் செயலாளர் ஜவாஹிர் ஹாஜியார் மற்றும் முஸ்லிம் பிரமுகர்கள் பங்குபற்றினர்.

மூத்தசட்டத்தரணி இஸ்மாயில் தனது தலைமையுரையில், சமாதானம் நிரந்தரமாக ஏற்படவேண்டும் என்று அனைத்து இனமக்களும் பெரும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்துணர்வுடன், இணைக்கப்பாட்டுடன் செயற்பட்டு சமாதானத்தை நிலைபெறச் செய்யவேண்டும் என்று கூறினார். (25)

# பிரதேச செயலரிடம் முறையிட்டும் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை

## சிதம்பரபுரம் மக்கள் புகார்

(செட்டிகுளம்)

வவுனியா சிதம்பரபுரம் புதிய குடியேற்றத் திட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் பல்வேறு வகையிலான சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். 8 வருடங்களுக்கு முன்னர் குடியமர்த்தப்பட்ட அந்த மக்களின் காணிகளுக்கு இன்றுவரை உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும், அங்கு உள்ள 3 குழாய்க் கிணறுகள் பாரிய அளவில் சேதம் அடைந்திருப்பதன் காரணமாக போதியளவு நீர் இல்லை என்றும், அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் சுகாதாரம், மருத்துவம் போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். தமக்குள்ள இப்பிரச்சினைகள் குறித்து, தாம் பிரதேச செயலரிடம் முறையிட்டும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை என்றும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (21)

# மாதமொன்றில் 80 கசிப்பு வியாபாரிகள் கைது

## வவுனியா பொலிசார் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 80இற்கும் அதிகமானோர் கசிப்பு காய்ச்சும் குற்றத்திற்காக வவுனியா பொலிஸ் நிலையத்தால் கைது செய்யப்படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று போதைப் பொருள் பாவிப்பவர்களும் போதையுடன் சம்பந்தப்படுபவர்களும் கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவ்வாறு கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதாகவும், தண்டப்பணம் அறவிடுவதுடன் பலர் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பொலிசார் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதாகவும், இதே வேளை தேக்கங்காட்டுப் பகுதியிலேயே போதைப் பொருள் தொடர்பாக அதிகளவு முறைபாடுகள் கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (21)

# வெள்ளவாய்க்காலாக மாறியுள்ள விசுவமடு - பிரமந்தனாறு வீதி

## நடமாடும் மருத்துவ சேவையும் தடைப்பட்டது - மக்கள் கவலை

விசுவமடுவிலிருந்து பிரமந்தனாறுக்குச் செல்லும் பிரதான வீதி கடந்த பலவருடங்களாக எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாமையால் பாரிய குன்று குழிகள் ஏற்பட்டுள்ளதுடன் கழிவு நீர் ஓடும் வாய்க்காலாக மாறியுள்ளதால் மழைநீர் வீதிக்குக் குறுக்காக அல்லாமல் வீதிவழியே ஓடிக்கொண்டு இருப்பதால் பாரியளவில் மண் அரிப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால் இவ்வீதியால் செல்லும் நாதன்குடியிருப்பு, கல்லாறு,பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாது பெரும் துன்பத்துக்குள்ளாகி வருகின்றனர். அத்துடன் இப்பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச/அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாது சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாகி வருகின்றனர். இவ்வீதிச் சீர்கேட்டால் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் மாலை நேரம் தருமபுரம் வைத்தியதிகாரி அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த மருத்துவ சேவை வாகனம் கொண்டு செல்ல முடியாததன் காரணமாக தடைப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு வேலைத்திட்டக் கூட்டம் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது இவ்வீதி 2004 ஆம் ஆண்டு முதன்மை வீதியாகத் திருத்தப்படும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் இதுவரை காலமும் வீதி திருத்தப்படாது இருப்பது குறித்து இப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்து வருகின்றனர். (14)

# மன்னாரில் தொடரும் மழையால் வெள்ளப் பெருக்கு அபாயம்

(மன்னார்)

கன்னியர் மட வீதி, அல்லசார் ம.ம.வி. செல்லும் வீதி, மூர் வீதிகளின் மக்களின் அன்றாட அலுவல்கள் மன்னாரில் பெய்துவரும் தொடர் பெருமழையினால் பாதிப் படைந்துள்ளது. அததுடன் உப்புக் குளம், சாந்திபுரம், எமில்நகர், சாவக்கட்டு, பள்ளிமுனை, 50வீட்டுத்திட்டம் போன்ற இடங்களில் மக்கள் வெளியேறி பொது இடங்களில் வசிக்கின்றனர். இதற்காக XOA நிறுவனம் இவர்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்கிறது. கடைசியாக மன்னாரில் பெய்த மழை வீழ்ச்சி 46.3 மி.மீற்றராகும் இதே சமயம் கட்டுக்கரையின் நீர்மட்டம் 10.8 அடியாகும். (மி)

# காலபோக நெற்செய்கை தொடர்மழையால் பாதிப்பு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தில் 2004-2005 காலபோக நெற்செய்கை தொடர் மழை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படாத பகுதி விவசாயிகள் நெல்விதைத்து ஒன்றரை மாத காலம் சென்று விட்ட நெல் வயல்கள் களை நாசினி விசிறி களைகளை கட்டுப்படுத்தி பசளை இடமுடியாது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

நெல் முளைத்து 15-22 நாட்களுக்கிடையில் களை நாசினி விசிறி,களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் ஆனால் இக்காலம் கடந்து விட்டது. இதன் காரணமாக களைகளைக் கட்டுப்படுத்த முடியாது போவதுடன் உரிய காலத்தில் பசளை இடாமையால் நெற்பயிர்வளர்ச்சி குறைந்து விளைச்சலும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும். இதைவிட சிறுபோகம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் அறுவடை தாமதமாகியதால் தற்போது விதைப்பை மேற்கொண்டிருக்கும் விவசாயிகள் தொடர் மழை காரணமாக நெல் முளைக்காமலும், பகுதி பகுதியாக குறைந்தளவிலேயே முளைப்பதன் காரணமாக விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்து வருகின்றமையால் பெரிதும் கவலையடைந்துள்ளனர். (14)

# சிரமதானம்

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேச மக்களால் பிரதேச மாவீரர் தினவிழாக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. பிரதேச மாவீரர் விழாக்குழுத் தலைவர் ஆ.முருகானந்தன் தலைமையில் இச்சிரமதானம் இடம் பெற்றது. இதில் பாண்டியன் குளம், பனங்காமம்பற்று ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள் மற்றும் வடகாடுவாழ் மக்களும் கலந்து கொண்டனர். (24)

# வீதி விபத்தில் பெண் காயம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளியுடன் முச்சக்கரவண்டி மோதியதில் உந்துருளியில் பயணித்த பெண்ணொருவர் காயமுற்ற நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி முன்னாள் முதலாம் கட்ட வைத்தியசாலைக்குஅருகாமையில்ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

தமிழீழ வீதிப்போக்குவரத்து காவல் துறையினர் முச்சக்கர வண்டி சாரதியைத் தடுத்து விசாரணையினை மேற்கொண்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர் (சோ)

# குளங்களின் பாதுகாப்புக்குறித்து விழிப்புடன் இருக்கக் கோரிக்கை

வவுனியா வட்க்குப் பிரதேசத்தில் நியாப் 1 திட்டத்தின் கீழ் 28 குளங்கள் இவ் வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டு தற்போது சகல புனரமைப்பு வேலைகளும் முடிவுறும் நிலையிலுள்ளன. ஆனால் தொடர்ந்து பருவ மழை பெய்து குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் மிகவும் கண்காணிப்புடன் இருப்பது அவசியமாகின்றது. எனவே குளப் பங்காளர்களும் மற்றும் கமக்கார அமைப்புக்கள், அவ்வூர் பொது அமைப்புக்கள் என்பன விழிப்புடன் இருப்பதுடன் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து பாதிப்புக்கள் ஏற்படுமாயின் அவற்றை உடன் தடுத்து நிறுத்தக்கூடிய வகையில் சகல விதமான ஆயத்தங்களுடன் இருந்து தகவல்களை உடனுக்குடன் உரிய இடங்களுக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.




டென்மார்க் கேர்ளிங் நகரிலுள்ள சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலையத்தினதும் அனுசரணையுடன் நெடுங்கேணி அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனத்தினால் (**NDRO**) புதிதாக அமைக்கப்பட்ட "கரப்புக்குத்தி விஞ்ஞானங்குளம்" சிவன் முன்பள்ளியின் புதியகட்டடத்தை படத்தில் காணலாம். (கு.தீ)

# வட்டக்கச்சி மகாவித்தியாலயப் பொன்விழா நிகழ்வு

(வட்டக்கச்சி)

கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலய பொன்விழா வரும் 16ஆம் திகதி மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளது.முதல் அமர்வானது காலை கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் வரலாறு தாங்கிய பொன்விழா மலர் வெளியீட்டு வைபவமும்.இரண்டாம் அமர்வு மதியம் பாடசாலையில் உள்ள சிறந்த மாணவர்களுக்கும், கோட்ட,மாவட்ட, மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மூன்றாம் அமர்வாக மாலை பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (12)

# குடாநாட்டில் வெள்ளப் பாதிப்புக்குள்ளானோருக்கு அரசின் உதவிகள் எதுவும் இதுவரை கிட்டவில்லை!

## -நலன்புரி நிலையங்களிலும் மக்கள் அவலம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டினில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழையினால் தாழ்நிலப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் பாதிப்புகளிற்குள்ளாகி வருகின்றபோதிலும் அவர்களிற்கான அரச உதவிகள் ஏதும் இதுவரை கிட்டியிருக்கவில்லையென குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

குறிப்பாக வலிகாமம் வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயம் மற்றும் நாகர்கோவில் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம் பகுதிகளிலும், யாழ்.நகரப்பகுதியினை அண்டியுள்ள புறநகர்ப் பகுதிகளிலுமேயே தற்போது பெரும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்.நகரையண்டிய காக்கைதீவு,பொம்மைவெளிமற்றும் வசந்தபுரம் போன்ற புறநகர்ப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வெளியேறியுள்ள ஒருதொகுதி குடும்பங்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளன. ஏனைய சில குடும்பங்கள் தொடர்ந்தும் வெள்ளப்பாதிப்பிற்குள்ளாகிய பகுதிகளிலேயே தங்கியுள்ளன.

இதேவேளை முன்னைய அரசின் ஆட்சிக்காலப்பகுதியினில் ஒரு தொகுதி வீடுகள் குறித்த தாழ்நிலப்பகுதிகளிலேயே அமைத்து வழங்கப்பட்டிருந்தன. அவ்வீட்டு தொகுதிகளிலும் பெரும்பாலானவை வெள்ளத்தினால் தற்போது சூழப்பட்டுள்ளன.

இதனிடையே உயர்பாதுகாப்பு வலயங்காரணமாக சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையினில் நலன்புரி நிலையங்களிலுள்ள பெரும்பாலான குடும்பங்களும் வழமைபோன்று இவ்வாண்டிலும் வெள்ளப்பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. பெரும்பாலான நலன்புரி நிலையங்கள் தாழ்நிலப்பகுதிகளிலேயே அமைந்துள்ளதாலேயே இவ் வெள்ளப் பாதிப்பு தொடர்ந்தும் ஏற்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே வெள்ளப் பாதிப்பிற்குள்ளானவர்கள் இயல்பு வாழ்விற்கு திரும்புவதற்கான எந்தவொரு உதவியினையும் அரசு வழங்கியிருக்கவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறிப்பாக யாழ் மாநகர சபையினரால் விநியோகிக்கப்படும் குடிநீர் சேவை தவிர்ந்த வேறெந்த அரச உதவிகளும் தமக்கு கிட்டியிருக்கவில்லையெனவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வெள்ளப்பாதிப்பிற்குள்ளான தமக்கான எந்தவொரு உதவியினையும் வழங்கியிராத அரச அதிகாரிகள் இப்பகுதிக்கு வெள்ளத்திற்குப் பின்னர் விஜயம் செய்திருக்கக் கூடவில்லையெனவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தற்போதைய சூழலை கருத்திற்கொண்டு தமக்கு வழங்கப்படும் மாதாந்த உலர் உணவு நிவாரணத்தையாவது துரிதப்படுத்தி வழங்க யாழ் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே யாழ். நகரினையண்டிய புறநகர்ப்பகுதிகளில் வெள்ளப் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களில் ஒரு பகுதியினருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உலர் உணவுக் கொடுப்பனவுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## மணல் லொறிகளால் ஆபத்து!

(தென்மராட்சி)

மட்டுவில் பிரதான பொற்கொல்லர் வீதி மற்றும் கமலாசினி வீதிகளில் வேகக் கட்டுப்பாடுகள் இன்றி செல்லும்மணல் லொறிகளால் சாலை விபத்துக்கள் ஏற்படும் நிலை தோன்றியிருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு நீதிமன்றில் தண்டனை

(நல்லூர்)

குடித்து விட்டு உந்துருளி செலுத்திய இருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் தலா 6 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டம் விதித்ததுடன், உந்துருளிகளையும் ஒரு மாதகாலத்திற்கு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கும்படியும் கட்டளையிட்டுள்ளார்.

அச்சுவேலிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின்முன்னர் ஆஜர்ப்படுத்தப்பட்டவர்கள் சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த அப்புக்குட்டி லோகநாதன் மற்றும் நவக்கிரி புத்தூரைச் சேர்ந்த திருச்செல்வம்லவன் ஆகியோராவர் இவர்களுக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குடிபோதையில் உந்துருளி ஓட்டிச்சென்றவர்கள் இந் நபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (41)

## யாழ்.சிறைச்சாலையில் இடநெருக்கடி கைதிகளை இடம் மாற்ற ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையினுள் பெரும் இடநெருக்கடிநிலைமைகளைத் தொடர்ந்து இங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தண்டனைக் கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மற்றம் செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

சொந்தக் கட்டடம் இல்லாத நிலையில் சிறைச்சாலைக்குரிய அடிப்படை வசதிகள் அற்ற தற்காலிக இடம் ஒன்றில் தற்பொழுது இயங்கிவரும் யாழ். சிறைச்சாலையினுள் கைதிகளை பாதுகாப்பாகத் தடுத்துவைத்திருக்கக் கூடிய வகையிலான போதியளவு சிறைக்கூண்டுகள் காணப்படவில்லை.

இதன்காரணமாக இங்குள்ள ஒவ்வொரு சிறைக்கூண்டினுள்ளும் அளவிற்கதிகமாக கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதனால் கைதிகளிடையே தொற்றுநோய்பரவிவருவதுடன் கைதிகளுக்கிடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெறும் சூழ்நிலையும் காணப்படுகிறது.

இதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையடுத்தே யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தண்டனைக் கைதிகளை வேறு சிறைகளுக்கு மாற்ற ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும், இதன்முதற்கட்டமாக இங்கிருக்கும் சுமார்30இற்கும்மேற்பட்ட நீண்டகால தண்டனைக்கைதிகள் அடுத்தவாரம் வெலிக்கடைச்சிறைச்சாலைக்கு மாற்றம் செய்து தடுத்து வைக்கப் படவுள்ளனர்எனவும் யாழ்சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (33)

## அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுகை

(தென்மராட்சி)

அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற நிலையில் வாழ்ந்து வரும் கரப்பக்குறிச்சி மேற்கு மக்கள் தமக்கு அடிப்படை வசதிகள் உடனடியாக செய்து தரக்கோரி, பலதரப்புக்களுக்கும் முறையிட்டிருப்பதாக தெரியவருகிறது.

குடிநீர்க் கிணறு, மலசலகூடம் மற்றும் ஓலைக்குடிசைகளில் வாழும் பின்தங்கிய இப்பகுதி மக்களுக்கு குறைந்த செலவிலான அடிப்படை வீட்டுக்கட்டுமானங்களை செய்து தரும் படியும் பல தரப்பினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதுவரை காலமும் அரசோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ, எந்தவொரு வேலைத்திட்டங்களையும் இப்பகுதியில் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (28)

## நெற்பயிர்கள் அழியும் அபாயம்!

(தென்மராட்சி)

தொடர்ந்து பெய்து வரும் மழையால் தென்மராட்சிப் பிரதேசத்தில் பயிரிடப்பட்டுள்ள நெல் வயல்கள் அழியும் நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாய அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

இப்பிரதேசத்தில் பயிரிடப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் வெள்ளநீர் பயிர்களை மூடும் நிலையில் இருப்பதாகவும், தொடர்ந்து மழை நீடிக்குமெனில் பயிர்கள் அழுகும் நிலை ஏற்படும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு மத்தியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல இடங்களில் மழை வெள்ள நீர் வீடுகளில் புகுந்துள்ளதாகவும் இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## யாழ். இல் சமுர்த்தி செயற்றிட்ட முன்னேற்பாட்டு நடவடிக்கை!

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் அடுத்தாண்டு முதல் சமுர்த்தி செயற்றிட்டம் மேற்கொள்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைக் கொழும்பில் இருந்து வந்துள்ள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள்.

இதன்ஒரு கட்டமாக கடந்தவாரம் யாழ்.குடாநாட்டில் உள்ள பிரதேசசெயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்குச் சென்று கிராம அலுவலர்கள். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அறிமுக கலந்துரையாடலை நடத்திச் சென்றுள்ளார்கள்.

முதற்கட்டமாக வீடுவீடாகச் சென்று ஆளணிப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தித்திட்ட உதவிகள் இவ் ஆளணிப்படிவத்தை மையமாகக்கொண்டே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முதற் கட்டமாக யாழ்.குடாநாட்டில் யாழ்ப்பாணப்பிரதேச செயலாளர் பிரிவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது. (41)

## நாட்டின் தற்போதைய கால நிலையில் இடிமின்னலின் தாக்கம் அதிகரிக்கலாம்

### வளிமண்டல திணைக்கள அதிகாரி எச்சரிக்கை

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றங்களினால் நாடு முழுவதும் இடிமின்னலின் தாக்கங்கள் ஏற்படும் என சிறிலங்காவின் வளிமண்டல திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

இதனால் மக்களுக்குப் பெரும் ஆபத்துக்கள் ஏற்படலாம் எனவே மக்களைக் கவனமாக இருக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இடிமின்னல் தாக்கத்தினால் வருடம் ஒன்றுக்கு 50 பொது மக்கள் இறந்துள்ளனர். என்றும் அவர் கூறியுள்ளார்.

## மன்னாரில் மாவீரர் தின செயற்பாடுகள் கிராம,பிரதேச, மாவட்ட ரீதியாக முன்னெடுப்பு

(மன்னார்)

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு மன்னாரில் அரசியல் துறையினரும், மாவீரர் செயற்பாட்டுக்குழுவும் இணைந்து கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களில் பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். சகலதுறையிலுள்ள அரசாங்க அலுவலகங்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தப்பணியைச் செய்து வருகின்றனர். மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவித்தல், பயன்தரும் மரங்களை நாட்டுவித்தல், தேசிய எழுச்சிப்பேரவையின் கிளைகள் மூலம் கிராமங்களில் சிரமதானங்களை மேற்கொள்ளுதல் போன்றனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதோடு 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரைதேசியக்கொடியேற்றல் மாவீரர்துயிலுமில்லங்களைத் தரிசித்தல் போன்ற முக்கிய செயற்பாடுகளைச் செய்வதற்கும் துரிதமான முறையில் வேலைத்திட்டங்களை மன்னார் அரசியல்துறையினர் மேற் கொண்டு வருகின்றனர். (மி)

## -கிளி. பிரமந்தனாறு ம.வி.யில்- 15 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் புதிய கட்டடம் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலய 15ஆம் ஆண்டு விழாவும், மலர்வெளியீடும், புதியகட்டடத் திறப்புவிழாவும் எதிர்வரும் 17ஆம் திகதி பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பள்ளிமுதல்வர் க.ச. சிவலிங்கம் தலைமையில் முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் முதல்நிகழ்வாக கிளி. அரசஅதிபர் தி.இராசநாயகம் புதியக்கட்டடத்தினை சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கவுள்ளார்.

அடுத்து மலர் வெளியீட்டினை கிளிவலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் வெளியிட்டு வைக்க, தமிழீழ கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர்அருள் மாஸ்ரர் சிறப்புப் பிரதியினைப் பெற்றுக்கொள்ளவுள்ளார். மாணவர்களுக்கான பரிசில்களை கிளிநொச்சி கோட்டக்கல்வி அலுவலர் திருமதி இ.அரியரத்தினம் வழங்கி வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பூநகரி பி.சபை வைத்தியரால் நடமாடும் வைத்திய சேவை

(பூநகரி)

நோயாளர்களின் நன்மைகருதி பூநகரி பிரதேசசபை வைத்தியரால் கடந்த சில நாட்களாக குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று வைத்திய சேவைகள் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 2ஆம் நாள் கௌதாரிமுனையிலும் 4ஆம் நாள் நல்லூரிலும் 9ஆம் நாள் ஞானிமடத்திலும் வைத்திய சேவைகள் நடைபெற்றன இதன் தொடர்ச்சியாக 16 ஆம் நாள் மீண்டும் கௌதாரிமுனையிலும் 18 ஆம் நாள் நல்லூரிலும் 20 ஆம் நாள் ஞானிமடத்திலும் இறுதியாக 25 ஆம் நாள் பள்ளிக்குடாவிலும் வைத்திய சேவைகள் நடைபெறும் என பிரதேச சபை வைத்தியர் தெரிவித்தார்.(34)

# சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவது எப்போது?

த சண்டேலீடர்
ஆங்கிலத்தில் பிரடறிகா
ஜேன்ஸ்
தமிழில் வழிவேல்

சிறிலங்காவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு விசேட நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அதாவது சந்திரிகா சனாதிபதியாகப் பதவியேற்ற 10ஆம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் ஆகும். அன்றைய தினத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து சந்திரிகாவுக்குப் பல வாழ்த்துச்செய்திகள் வந்து குவிந்தன. எனினும் வடக்கு கிழக்கு மற்றும் பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்களின் வாழ்த்துக்கள் சென்று சேர்ந்திருக்குமா என்பது சந்தேகமே காரணம் அவா பதவியேற்ற கையுடன் தமிழ் மக்களுக்கு அகதி அந்தஸ்தை வழங்கியமையாகும். எனினும் அகதி அந்தஸ்த்துக் கிடைத்த ஒரு சிலர் சந்திரிகாவை வாழ்த்தாம லும் இருக்க முடியாது.

இது இவ்வாறிருக்க சந்திரிகாவின் பிறந்ததினம் 1945 ஜுன் 29ஆகும். அதிலிருந்து 2005ஆம் ஆண்டு யூனில் அவரது வயது 60வதைத் தாண்டிவிடும்.



கையில் அரசியலமைப்பு புத்தகத்துடன் சந்திரிகா

சந்திரிகா 1996ஆம் ஆண்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உரையாற்றும்போது இந்நாட்டில் 55வயது கடந்தும் பதவிகளிலிருந்து ஓய்வுபெறாமல் 60வயது வரை பதவியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்போர் தனது பதவியை இளைய தலைமுறைக்கு விட்டுக் கொடுத்து ஓய்வில் செல்வது நல்லது என்றும் தான் 60வயதை அடைந்தவுடனேயே பதவிவிலகி விடுவதாகவும் கூறினார். அவரது அவ்வுரை அன்று ஊடகங்களிலும் பதிவு செய்யப்பட்டு மீள ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

ஆயினும் சுமார் 8வருடங்களின் பின்னர் 60வயதை அடைய இன்னும் 7மாதங்களே உள்ள நிலையில் அவர் அடுத்த சனாதிபதி அல்லது பிரதமராக வரும் முயற்சியிலீடுபட்டுக் கொண்டிருக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக பதவியைக் கட்டிப்பிடித்திருந்த சந்திரிகா ஜே.வி.பி.யின் துணையுடன் கடந்த ஏப்பிரலில் தனது அரசாங்கத்தை அமைத்துள்ளார்.

இப்போது சந்திரிகா நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை நீக்கிவிட்டு பாராளுமன்ற அதிகார முறையை ஏற்படுத்த முயற்சி செய்கிறார். இந்த்விடயம் நிறைவேறும்போது சந்திரிகா பிரதமராகவோ, எதிர்க்கட்சித் தலைவியாகவோ பதவி வகிக்கலாம். அதற்காக 2005ஆம் ஆண்டு அவர் இந்நாட்டுக்குச் செய்ய விருக்கும் நன்மைகளை எடுத்துக் கூறி மக்களின் ஆதரவைப்பெறும் முயற்சியில் ஈடுபடுவார். இது அவரது பொய்முகம் என்பது தெரியாததல்ல.

தற்போது இன்னும் ஒரு குழப்பநிலை தோன்றியிருக்கிறது. அதாவது சந்திரிகா அவரது சனாதிபதி பதவிக்காலத்தை மேலும ஒரு வருடம் நீடிக்க உத்தேசித்திருப்பதாகும். இந்த விவகாரம் சட்ட ரீதியாகவும், ஒழுங்குவிதிக ளின் படியும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. ஒழுங்கு விதிகளின் படி பார்த்தால் அவர் தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்ல வேண்டும். சட்ட ரீதியாக நோக்கும்போது அவர் இரண்டாம் முறை பதவிக்காலத்தைப்பெற முயற்சிக்க வேண்டும்.

சந்திரிகா தனது முதலாவது பதவிக்காலம் முடிவடைய ஒரு வருடம் இருக்கும்போதே அதாவது 1999இல் சனாதிபதித் தேர்தலை நடத்தி சனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். அந்த வகையில் அவரின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டு டிசம்பரில் முடிவடையும் என்பது மக்களின் அபிப்பிராயமாகும். அது சிறிலங்காவின் அரசியலமைப்பின்படி சனாதிபதியாகப் பதவிவகிக்கும் ஒருவரின் பதவிக்காலம் 6வருடத்திற்குட்பட்டதென்பதாலாகும். ஆயினும் சந்திரிகா குமாரதுங்க 2000ஆம் ஆண்டிலும் 3ஆம் முறையாக சனாதிபதியாக ரகசியப் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டமையானது பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது.

இந்தப் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளப்பட்டமையானது ஒரு கண்ணியமற்ற ஒழுங்கீனமான செயல் என்பதை சந்திரிகாவும் அப்போதைய நீதியரசரான சரத் என் சில்வாவும் மறுக்கவில்லை.

இவ்விவகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அரசியலமைப்பு சட்ட விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க கூறியதாவது, சந்திரிகாவும், சரத் என் சில்வாவும் 2000ஆம் ஆண்டு பதவிப்பிரமாணம் செய்துகொண்டமை சட்ட ஒழுங்கின்படி தவறு எனப் பொதுமக்களுக்கு அறிக்கை விடுத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

முதலாவது பதவிக்காலம் முடியமுன்பு (1999)இல் இரண்டாவது பதவிப்பிரமாணம் செய்து கொண்டது தவறு. இதன் பாதிப்பு 2000ஆம் ஆண்டே தெரியவந்தது எனக்கூறும் எதிரிசிங்க தவறுகள் நடைபெறுவது சகஜம் என்றாலும் இவ்வாறான தவறுகள் மூடி மறைக்கும் போதே அவை சட்ட ஒழுங்குகளை மட்டுமன்றி அரசியல் வாதிகளையும் நீதியரசரையும் பாதிக்கின்றது எனக்கூறியுள்ளார்.

ஒரு நீதிமன்றத்தில் முன்னால் நிறுத்தப்பட்டுள்ள குற்றவாளி தனக்கு சட்டவிதிகள் தெரியாமல் இந்தத் தவறைச் செய்ததாகக் கூறினால்அதை ஏற்க முடியுமா?

சனாதிபதி இந்தத் தவறுக்குப் பிராயச்சித்தம் காண வேண்டுமாயின் அவர் 2005 டிசம்பரில் அல்லது 2006ஆம் ஆண்டு சனவரியில் சனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என்றும் எதிரிசிங்க கூறியிருக்கின்றார்.

சனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸி இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது, அரசியலமைப்பின்படி அரச பதவி வகிக்கும் அனைவரும் பதவியேற்கும்போது பிரமாணம் ஒன்றைப பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார்கள். அதுபோல் சந்திரிகாவும் பதவிப்பிரமாணம் செய்திருக்கிறார். ஆனால் அது ரகசியப் பிரமாணம் என்பதாலேயே பிரச்சினை எழுகின்றது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் சனாதிபதி பதவிப்பிரமாணம் செய்யும்போது அது சம்பிரதாய பூர்வமாக நடைபெற வேண்டும் என்றும் சொக்ஸி கூறியுள்ளார்.

சிறிலங்காவின் சட்டவிதிகள் சுருட்டி வைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் 1994இல் முதலாவதாகப் பதவியேற்ற சந்திரிகா 2000ஆம் ஆண்டுவரை பதவியிலிருந்து மீண்டும் தேர்தலை வைத்து வென்று பதவிப்பிரமாணம் செய்யலாம் அதை விடுத்து சந்திரிகா 1999ஆம் ஆண்டு தேர்தலை நடத்தியதன் மூலமும் அப்போது ஒரு பதவிப்பிரமாணமும் 2000ஆம் ஆண்டு ஒரு பதவிப்பிரமாணமும் எடுத்துக் கொண்டதால் சட்ட வரைவுகள் சுருட்டி வைக்கப்பட்டிருப்பது என்பதில் எவ்வித தவறும் இருக்க முடியாது. இதேவேளை அரசியலமைப்பின் 13ஆவது சரத்தின் பிரிவு 3Aஇல் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் அரசியலமைப்பின்படி 6 வருடங்கள் பதவிவகிக்கலாம் என்றும், முன் கூட்டியே தேர்தல் நடத்தினாலும் அது முத லாவது 6 வருடகாலத்தையும் உள்ளடக்கும் என்றும் கூறப்படுகின்றது.

ஆகவே சந்திரிகா 2006 வரை தான் பதவியில் இருக்க முடியும் என சந்திரிகாவின் சட்ட ஆலோசகர் டெஸ்மன்பர்னாண்டோ தெரிவிக்கிறார்.

இதனை ஏனைய சட்டவாளர்கள் மறுத்து வாதாடுகின்றனர். சட்டத்தரணி நிசாம்காரியப்பர், எல்மோ பெரேராவும் 2006ஆம் ஆண்டு வரை சந்திரிகா பதவியிலிருக்க சட்டத்தில் இடமில்லை என்று கூறுகின்றனர்.

இவ்வாறு பல சட்ட வல்லுனர்கள் பல்வேறு வகையில் விமர்சித்தபோதும் சந்திரிகா 2006ஆம் ஆண்டுவரை பதவியில் இருப்பதைத் தடுக்கமுடியாது காரணம் ஜனநாயகம் எனக்கூறிக்கொண்டு சந்திரிகா தனக்கு வேண்டியவாறே அரசியலை நகர்த்தி வருகின்றார். இது ரணிலின் அமைச்சுக்கள் மூன்றை பறித்தெடுத்தது முதல் ஆரம்பித்தது. அரசியலமைப்பின் 31ஆம் பிரிவு Dயில் குறிப்பிட்டுள்ளபடி சனாதிபதி 2006 ஆம் ஆண்டுவரை பதவியில் இருக்கலாம் என்று கூறப்பட்டாலும் அரசியலமைப்பின் 34ஆம் பிரிவின் 2ஆம் அதிகாரப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பின்பே 6 வருடங்கள் பதவியில் இருக்கலாம் எனக் கூறுகின்றது.



பதவியேற்றபின்பு உரையாற்றும் போது

அவ்வாறு தேர்தெடுக்கப் பட்டாலும் பதவியேற்கும் காலம் 14 நாட்களுக்குள் இருக்க வேண்டும். இந்த 14 நாட்களுக்கும் இடைக்கால நிர்வாகம் ஒன்று இருக்க வேண்டுமல்லவா.

நிலைமை இவ்வாறிருக்க பொதுமக்கள் என்ன நினைப்பார்களோ, சட்டம் என்ன கூறுகின்றதோ என்பதை மதிக்காது 2006 வரை பதவியில் இருக்க முனைகிறார். இதன் காரணமாகவே தேர்தல் திணைக்களமும் 2005ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலை நடத்தவும் தயாரின்றியிருக்கின்றது. பிரதித் தேர்தல் ஆணையாளர் 2005ஆம் ஆண்டு சனாதிபதிக்கான தேர்தல் ஒன்று நடைபெறும் என்பதை முற்றாக நிராகரித்துள்ளார். அவரின் கூற்றுப்படி தேர்தல் ஒன்று அடுத்தவருடம் நடைபெறாது என்ற போதும் தேர்தல் திணைக்களம் ஊடகங்களுக்கு வழங்கிய செய்தியில் 2005இல் தேர்தல் நடக்கும் என்று தெரிவித்துள்ளது. இந்த நிலை ஆணையாளர் தயானந்த திசாநாயக்காவையும் அரசியல் ரீதியாகப் பாதித்துள்ளமை அடுத்தபிரச்சினையாகும். எவ்வாறாயினும் சந்திரிகா தனது சொந்தநலன் கருதியே பதவியில் நீடிக்க முயற்சி செய்கின்றார் என்பதே தெளிவான விடயமாகிறது. அத்துடன் அவரது பெற்றோரும் பிரபல அரசியல் தலைவர்களாக இருந்தும் அவர்களது இரத்தம் தனது உடலில் இருக்கும்வரை அரசியலில் இருந்துஓய்வு கொள்ளப் போவதில்லை. 60 வயதுக்குப் பின்னரும் அவர் அரசியலில் குறிப்பாக சனாதிபதிப்பதவியில் இருக்கும் வரையிலோ பிரதமராக வந்தாலுமோ ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களான ஜயரத்ன, சரத் அமுனுகம, கதிர்காமர், விக்கிரமநாயக்க போன்றோர் உயர்பதவி வகிக்க வாய்ப்பில்லாமல் போகும்

## மக்களுக்கு சேவைசெய்ய முடியாத நிலையிலுள்ள நானாட்டான் வைத்தியசாலை

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் வைத்தியசாலை நீண்ட நாட்களாக எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்குகின்றது.

இந்த வைத்தியசாலையை நம்பி ஏறக்குறைய 35ஆயிரம் மக்கள் இப்பகுதியில் வசித்து வருகின்றனர்.

போதிய மருந்துகள் இல்லாமையும் அம்புலன்ஸ் வண்டி எதுவும் அற்ற நிலையிலும் பணியாளர்களது எண்ணிக்கையும் குறைவான நிலையில் உள்ளதால் இங்குள்ள மக்கள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை போதிய நீர் வசதிகளோ மலசல கூட வசதிகளோ அற்ற நிலையில் காணப்படும் இவ்வைத்தியசாலை குறித்து உரிய அதிகாரிகள் பலருக்கு எடுத்துக் கூறிய போதி லும் இதுவரை எதுவித பலனும் எட்டவில்லை என்று அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர்.

பிரதேசத்தில் வைத்தியசாலை இருந்தும் அதிலிருந்து வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை குறித்து மக்கள் கடும விசனம் தெரிவித்துள்ளனர். (மி)

## பொலிசார் முன்னிலையில் நகரசபைத் தலைவர் மீது தாக்குதல்

### நாவலப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

அரசியல் ஆளுங்கட்சிவாதி ஒருவரின் இரு ஆதரவாளர்கள் நாவலப்பிட்டி நகரசபைத் தலைவரின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் அத்துமீறிப் புகுந்து அவர் உடுத்தி இருந்த உடுப்புக்களைக் கிளித்தெறிந்த பின் அவரைத்தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நடக்கும்பொழுது நகரசபை வளவில் இரு பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தார்கள் எனவும் அவர்கள் இது சம்பந்தமாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

**04** * இந்திய ரஷ்யகூட்டுத் தாயாரிப்பில் உருவான "பிரமோஸ்" ஏவுகணை ஒரிசா மாநிலம் சந்திப்பூர் கடற்கரை அருகே கப்பலில் இருந்து ஏவி வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.




**05**

* நெதர்லாந்தின் பிரபல சினிமா இயக்குனர் ''வான் கோவார்'' இனந்தெரியாதோர்களினால் கொலை செய்யப்பட்டார்.

**06**

* ஐவரிக் கோஷ்டில் நிலை கொண்டுள்ள பிரான்ஸ் நாட்டு சமாதானப் படையினர் அந்நாட்டின் 2 யுத்த விமானங்கள் மற்றும் ஒரு ஹெலிக்கப்டர் என்பவற்றை சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

* காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டு தாக்குதல் சம்பவங்களில் தீவிரவாதிகளும் ஒரு இந்திய இராணுவச்சிப்பாயும் பலியாகினர்.

* சீனா அறிவியல் சோதனைகள், நிலஆய்வு, திட்டமிடல் இயற்கைப் பேரழிவு தடுப்பு போன்ற நிர்ப் பந்தத்திற்கு உதவும் மேம்படுத்தப்பட்ட செயற்கைக்கோளை தாய்வான் செயற் கைக்கோள் ஏவுமையத்திலிருந்து 4-பி கேரியர் ரொக்கெட்டுமூலம் அனுப்பியது.

* எட்டு மில்லியன் யூரோ நாணய மோசடி தொடர்பாக 11 சந்தேகநபர்களை லித்துவேனிய பொலிசார் கைது செய்துள்ளனர்.

* பாக்தாத் சமாரா மற்றும் ரமாடி ஆகிய நகரங்களில் இடம்பெற்ற தாக்குதலில் 38 பேர் பலி.

**07**

* பொதுமக்கள் மீது ஈராக் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 34 பேர் உயிரிழந்ததையடுத்து இதற்கு பழிவாங்கும் பொருட்டு ஈராக் தீவிரவாதிகள் 21 பொலிசாரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

*இந்திய பிரதமர் மன்மோகன்சிங் நெதர்லாந்துக்கு விஜயம் செய்துள்ளார்.



* லண்டன் பேர்க்ஷயரில் அதிவேக ரயில் ஒன்று காரொன்றுடன் ரயில் கடவையில் மோதி விபத்துக்குள்ளானதில் ரயிலில் பயணம் செய்த 6 பேர் பலி; பலருக்குகாயம் ஏற்பட்டது.



*ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு 200 கிலோமீற்றர் வடமேற்கிலுள்ள ஹடிதாவில் உள்ள பொலிஸ் நிலையத்தை கிளர்ச்சியாளர்கள் தாக்கியதில் 22 பொலிசார் பலி.

**08**

*அமெரிக்காவின் பிரதிராஜாங்க செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் பாகிஸ்தானிற்கு விஜயம் செய்துள்ளார்.

*ஜப்பானின் வடபகுதியில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதில் 34பேர் பலி.

*ஈராக் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பலூஜாநகர்மீது அமெரிக்கப்படையினர் தாக்குதல் நடத்தியவேளை தீவிரவாதிகள் அமெரிக்க உலங்குவானூர்திகள் இரண்டைச் சுட்டுவீழ்த்தியுள்ளனர்.

## கடந்த வாரத்தில்

**04-11-2004-10-11-2004**

*ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இரு தேவாலயங்கள் மீதும் வைத்தியசாலையின் வெளியேயும் இடம் பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 8பேர் பலியானதுடன் 50 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

**09**

*ஈராக்கிய நகரான பகுபாவில் தீவிரவாதிகள் மூன்று பொலிஸ் நிலையம் மற்றும் ஆற்றுப்பாலம் ஒன்றைத் தாக்கியதில் 45பேர் பலியானதுடன் 25 பொலிசார் காயமடைந்தனர்.

*மத்திய சீனாவிலுள்ள ஹபி மாகாணத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில்ஏற்பட்ட இரசாயனவாயுக் கசிவினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு 108பேர்பாதிப்படைந்துள்ளனர்.

*அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் அமைச்சரவையைச் சேர்ந்த சட்டத்துறைச் செயலாளர் ஜோன்அஷ்க்ரொவ், வர்த்தகச் செயலாளர் தொன்இவான்ஸ் ஆகிய இருவரும் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளனர்.



**10**

*பாரதிய ஜனதாக் கட்சியின் பிரசாரப் பீரங்கி என அழைக்கப்படும் முன்னாள் கர்நாடக முதலமைச்சர் உமாபாரதி கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.



*அல்-ஹைதா தீவிரவாதிகளின் இலக்குகள் மீது பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் 6 தீவிரவாதிகள் பலி.

*வட பாக்தாத் பாலட் நகருக்கருகில் பாதையோரக்குண்டொன்று வெடித்ததில். அமெரிக்க வீரர்ஒருவர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

* ரஷ்யாவில் சைபீரியப் பகுதியில் கிசைல் என்ற இடத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் இடம்பெற்ற தீ விபத்தில் 19 பேர் உடல் கருகிப்பலியாகினர்.

# உப்பு, புளி இல்லாத கறிபோலவே தற்போதைய சமாதானம் இருக்கிறது

## கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்

(அலுவலகசெய்தியாளர்)

தற்போதைய சமாதானம் என்பது உப்பு, புளி இல்லாத கறிபோலவே இருக்கிறது சமாதான காலகட்டத்திலும் போராளிகளை இழந்து கொண்டே இருக்கிறோம் என கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி தெரிவித்துள்ளார்.

பூநகரி தளம் மீதான தவளைப்பாய்ச்சல் நடவடிக்கையின் 11 ஆவது ஆண்டு வெற்றி விழா நிகழ்வில் உரையாற்றும் போதே பூரணி மேற்கண்டவாறு கூறினார்.

இந்த பூநகரி பகுதி மீட்டெடுத்து 11 ஆண்டுகள் பூர்த்தியான நாளை, நாங்கள் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்த இடத்திலே சிறிலங்கா இராணுவம் இருந்த அந்தக் காலப்பகுதியில் அவனை அடித்துக் கலைத்து விட்டு ஒரு வெற்றியைக் கண்டவர்கள் இந்த விடுதலைப்புலிகள். ஒப்றேசன் தவளை என்று பெயர் சூட்டப்பட்ட இந்த நடவடிக்கையில் 480 இற்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்து விட்டார்கள் இந்த மண்மீட்கப்படவேண்டும் என்ற ஒரேஒரு நோக்குடன் விடாமுயற்சியாக இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதல் கடலிலும், தரையிலும் மிக வேகமாக நடந்தது.

1991 ஆம் ஆண்டு கடற்புலிகள் உருவாக்கப்படுகின்றார்கள் அன்று தோற்றம் பெற்ற கடற்புலிகள் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளாலி, பூநகரி படகுச் சேவை மூலம் யாழ்.குடாநாட்டிலுள்ள எமது தமிழ் மக்கள் வன்னிக்குப் பாதுகாப்பாக வரவேண்டிய தேவை இருந்தது இந்தவேளை கடற்புலிகளின் துணையுடனே மக்கள் கிளாலிக் கடலில் பயணித்தார்கள். இவ்வாறு தொடர்ந்து எமது மக்கள் பயணிக்க முடியாது என்ற காரணத்தால் 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே பூநகரித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போராட்ட வரலாற்றிலே கடற்புலிகள் கடலிலே சாதனை படைத்த தாக்குதல் ஆகும். இந்தத் தாக்குதலின் போது தான் முதன்முதல் மகளிர் படையணி லெப்ரினன்ட் கேணல் பாமா வீரச்சாவடைகின்றார். அதனைத் தொடர்ந்து மேஜர் கோபி, மேஜர்கணேஷ் என்ற இரண்டு கடற்புலிகளை நாங்கள் இழக்கின்றோம். அவ்வாறான ஒரு இக்கட்டான நிலையில் தான் பூநகரிப் படைத்தளம் எமது கையில் வந்தது. இத்தாக்குதலின் பின்பு விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக கட்டம் கட்டமாக தாக்குதலை மேற்கொண்டார்கள். அதில் வெற்றி கண்டார்கள். இந்தக் கட்டத்திலேதான் சிறிலங்கா அரசாங்கத்தால் யுத்தத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் போகின்ற ஒரு நிலை வருகின்றது. இந்தக்கால கட்டத்தில் தான் விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சு என்ற நிலை ஏற்படுகின்றது. இந்தச் சமாதான காலத்தில்தான் எங்களுடைய இரண்டு பாரிய கப்பல்கள் சர்வதேசக் கடலில் வைத்து சிறிலங்கா கடற்படைத் தாக்குதல்களுக்கு இலக்கானது.

இந்த சமாதான காலகட்டத்திலும் கூட எமது போராளிகளை இழந்த வண்ணம்தான் உள்ளோம். உப்பு, புளி இல்லாத கறிபோல சமாதானம் நகர்கிறது. சமாதானம் என்பது பார்வைக்கு மட்டும்தான்.அங்கே செயல் வடிவத்திற்கு சமாதானம் அல்ல, நிழல் யுத்தம்போல் தான் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.







படப்பிடிப்பு:-பிரதீபன்

இந்த கால கட்டத்தில்தான் பூநகரியை மீட்ட 11 ஆம் ஆண்டு வெற்றி விழாவை கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். இந்த மண்ணிலே மாண்ட மாவீரர்கள் சொல்லிச் சென்றது என்னவென்றால் இந்த மண்ணிலே வாழ்கின்ற தமிழினம் சந்தோசமாக வாழவேண்டும், நிம்மதியாக வாழவேண்டும். இந்த மக்களின் நிம்மதியான வாழ்விற்காகத்தான் நாங்கள் உயிரை நீக்கின்றோம். என்று அவர்கள் எந்த வழியில் சென்றார்களோ இன்று அந்த வழியில்தான் விடுதலைப்போராட்டம் நகர்ந்து கொண்டிருக்கிறது என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேருந்து பள்ளத்தில் வீழ்ந்து ஒருவர் பலி; 15பேர் காயம்

(கொழும்பு)

ஹட்டன் தண்டுக்கலையில் இருந்து ஹட்டன் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிற்றூர்தி ஒன்று பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானமையினால் ஒருவர் புலியானதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 10 பேர் பலத்த காயங்களுடன் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது

# கருணாகுழு உறுப்பினருக்கு பிணையில் செல்ல அனுமதி

### -பிணை எடுக்க எவரும் முன்வரவில்லை

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த மூன்று வார காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கருணா குழு உறுப்பினரான சுட்டி எனப்படும் கண்ணப்பன் கணேசன் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி இரவு மட்டக்களப்பு - கல்முனை வீதி ஆரையம்பதியில் இரவு தொலை நோக்குக்கருவியுடன் விசேட அதிரடிப் படையினரால் இவர் கைது செய்யப்பட்டார். பாதுகாப்புப் படையினரால் பாவிக்கப்படும் குறிப்பிட்ட கருவியை சட்ட விரோதமாக வைத்திருந்ததாக காத்தான்குடிப் பொலிசாரினால் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இவர் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது, ரூபா 25 ஆயிரம் சரீரப் பிணையில் செல்வதற்கான அனுமதியை பதில் நீதிபதி டி.சி.சின்னையா வழங்கினார். இருந்த போதிலும் பிணையாளிகள் எவரும்முன்வராத நிலையில் தொடர்ந்தும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

### -இனப்பிரச்சினை குறித்து-

# வெளிநாட்டவர்களுடன் பேசமுன் சனாதிபதியுடன் பேசவேண்டும்

### -மல்வத்த மகாநாயக்கர் ஆலோசனை

நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக வெளிநாட்டவர்களுடன் பேசுவதற்கு முன்னர் சனாதிபதியுடன் பேச்சு நடத்த வேண்டுமென மல்வத்த மகாநாயக்கர் கேட்டுள்ளார்

நேற்றுமுன்தினம் மல்வத்த மகாநாயக்கரை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ், மற்றும் கட்சியின் தலைவர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் சந்தித்தபோதே இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒஸ்லோ மாநாடு தொடர்பாக மகாநாயக்கருக்கு விளக்கமளிக்கும் முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சியினர் அங்கு சென்றிருந்தனர்

## இருவர்பலி

மினுவாங்கொடப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் பலியாகினர்

# சொற்கள் சிலவற்றைத் தெளிவாக பேசும் 2 மாதக் குழந்தை

தென்னிலங்கையில் ஹாலி எல பகுதியில் 2 மாதக் குழந்தையொன்று தெளிவாக சில சொற்களைப் பேசுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் 7 ஆம் திகதி பிறந்த சாருக தனஞ்சய என்ற



அக்குழந்தை ஒன்றரை மாதத்தில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், தாதி ஒருவர் ஊசி மருந்து ஏற்றிய போது அதுஅம்மா அக்கா என்று பேசியதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் வானொலியில் பிரித் ஓதுதல் மத உபதேச நிகழ்வுகள் ஒலிபரப்பாகும் போது அவதானமாக கேட்பதாகவும், சினிமாப்பாடல்கள் ஒலிபரப்பாகும் போது அழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் கிராம அலுவலர்களுக்கு ஒருநாள் பயிற்சிப்பட்டறை

(மன்னார்)

மன்னார் மாவட்டதிலுள்ள சகல கிராம அலுவலர்களுக்கும் அண்மையில் ஒருநாள் பயிற்சிப்பட்டறை மன்னார் தொழில்நுட்பப் பூங்கா மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசஅதிபர் பயிற்சி நெறியை நெறிப்படுத்தினார். மடு,மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர். இப்பயிற்சி நெறியானது மதுபானம் தொடர்பாக சட்டவிதிகள், காணிச் சட்டங்கள், சமூகசேவைகள், கிராம உத்தியோகத்தரின் நிர்வாகம் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கியதாக இடம்பெற்றது. (மி)


# கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலய பொன்விழா அழைப்பிதழ்

இடம்:- வித்தியாலய பிரதான மண்டபம்
காலம்:-16.11.2004 செவ்வாய்க்கிழமை.
தலைவர்:-திரு.சி. சந்திரராசா (வித்தியாலய முதல்வர்)

## முதலாம் அமர்வு பொன்விழா மலர் வெளியீடு

நேரம்;- மு.ப 8.30 மணி
பிரதம விருந்தினர்:- திரு தி. இராசநாயகம்.
(கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்)

## இரண்டாம் அமர்வு பரிசளிப்பு நிகழ்வு

நேரம்:- பி.ப 1.30 மணி
பிரதம விருந்தினர்:- திரு ப. அரியரத்தினம்
(வலயக்கல்விப் பணிப்பாளர்,கிளிநொச்சி)

## மூன்றாம் அமர்வு கலை நிகழ்வு

நேரம்:- பி.ப 5.00 மணி
பிரதம விருந்தினர்:- திரு பொன். நித்தியானந்தம்.
(விசேட ஆணையாளர்.கரைச்சிப் பிரதேச சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலை சமூகத்தினர்

விளம்பர அனுசரணை

முயற்சியாளர்களின் குடும்ப வங்கி
கிராமிய அபிவிருத்தி வங்கியின்
தளிர் சிறுவர் சேமிப்பு கணக்கு

(சி.10616)



# கேள்வி அறிவித்தல்

## மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு

01.01.2005ஆம் திகதி தொடக்கம் 31.12.2005 ஆம் திகதி காலம் முடிவடையும் வரைக்கும் கீழ்க்கூறப்படும் வைத்தியசாலைகளிற்கு கேள்விகள் எதிர்வரும் 14.12.2004 ஆம் திகதி மாலை 3.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும். சமைத்த உணவு, உலர்உணவு வழங்கல் மற்றும் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்விகள் பத்திரம் பெற விரும்புபவர்கள் கீழ்கூறப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு படிவக் கட்டணத்தையும், கேள்வி வைப்புப் பத்திரத்தையும் இவ் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

உலர் உணவு, பால் தவிர்ந்த சமைத்த உணவு பெறுவதற்கான கேள்விப் பத்திரம் பெறப்படும் போது 100000/= மேற்பட்ட 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கு பின் பெறப்பட்ட பெறுமதி சான்றிதழுடன் (Worth Report) கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டவாறு வங்கியில் பெறப்பட்ட உத்தரவாத முறி சமர்ப்பித்தல் வேண்டும்.

**விபரம் வருமாறு:-**

| விடயம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் படிவ கட்டணம் | உத்தரவாத முறி |
|---|---|---|---|
| அ. உலர் உணவு வழங்கல் | | | |
| 1. கிராமிய வைத்தியசாலை | 1500/= | 100/= | 20000/= |
| 2. சுற்றுயல் கூறு, மல்லாவி. | 2000/= | 100/= | 30000/= |
| ஆ பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல் | | | |
| 1. ம.ம.ம.மனை, முள்ளியவளை. | 1500/= | 100/= | 20000/= |
| 2. ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல். | 1500/= | 100/= | 20000/= |
| 3. மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு. | 2000/= | 100/= | 30000/= |
| இ. அழுக்குத்துணி சலவை செய்தல் | | | |
| 1. மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு | 1000/= | 100/= | - |
| 2. சுற்றுயல் கூறு, மல்லாவி. | 750/= | 100/= | - |
| 3. கிராமிய வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 400/= | 100/= | - |
| 4. ம.ம.ம.மனை, முள்ளியவளை. | 400/= | 100/= | - |
| 5. ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல். | 400/= | 100/= | - |

மேலதிக விபரங்கள் இப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி. து.வி.ஜெயக்குலராஜா,
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

(சி-10516)

# காஷ்மீர் குறித்த முஷாரப்பின் யோசனையை இந்தியா பரிசீலனைக்குட்படுத்தத் தயார்

## -அமைச்சர் நட்வர்சிங் அறிவிப்பு

(புதுடில்லி)

**“காஷ்மீர் பிரச்சினை பற்றி பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் தெரிவித்த யோசனையைப் பரிசீலிக்கத் தயார்” என்று இந்திய மத்திய அமைச்சர் நட்வர்சிங் அறிவித்துள்ளார்.**

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் சில யோசனைகளைத் தெரிவித்து இருந்தார்.

“காஷ்மீரில் உள்ள ரஜோரி-பூஞ்ச் ஜம்முலடாக், காஷ்மீர் பள்ளத்தாக்கு, கார்கில் ஆகிய பகுதிகளையும், பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் மற்றும் வடக்குப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து 7பகுதிகளாகப் பிரிக்க வேண்டும், இந்தப்பகுதியில் இருந்து படைகளை வாபஸ்பெற வேண்டும். இந்தப்பகுதிகளுக்குத் தன்னாட்சி வழங்கவேண்டும். இவை இந்தியா-பாகிஸ்தான் கூட்டுக் கண்காணிப்பில் இருக்க வேண்டும்” என்பதே அவருடைய யோசனை ஆகும்.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் கூறியதாவது,

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் இந்த யோசனையை முறைப்படி தெரிவித்தால் அதை நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்.

காஷ்மீர் பிரச்சினை இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினை. இந்தப்பிரச்சினையில் தீர்வுகாண 3ஆவது நாடு மத்தியஸ்தராக இருக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமர் 3 நாள் பயணமாக இம்மாதம் 23ஆம் திகதி புதுடில்லி வருகிறார். அவரது வருகையை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவருடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை இந்தியா நடத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### வேண்டுகோள்

(புதுடில்லி)

தற்போது கொலை வழக்கில் தொடர்புபட்டு சிறையில் இருக்கும் மடாதிபதி ஜெயேந்திரருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேலை கேட்டுள்ளார்.



காஷ்மீர் எல்லைப்பகுதியில் எறிகணை செலுத்தி ஒன்றை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய இராணுவத்தினர்.

# படைகுறைப்பு முடிவிற்கு காஷ்மீர் முதல்வர் வரவேற்பு

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் படையினரைக்குறைப்பது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விடுத்த அறிவிப்பு அங்குள்ள நிலைமையை மேம்படுத்துவதில் நல்லமுறையில் உதவும் என்று மாநில முதலமைச்சர் முக்தி முகமத்சயித் கூறியுள்ளார்.

மேலும் இந்தியாவும், பாகிஸ்தானும் எடுத்துவரும் நம்பிக்கை வளர்ப்பு முயற்சிகள் ஜம்மு காஷ்மீர் மாநில மக்களின் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காங்கிரசில் ப.சிதம்பரம் மீண்டும் இணைய ஏற்பாடு

(புதுடில்லி)

இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் காங்கிரஸ் சனநாயக பேரவை கட்சியை நடத்தி வருகிறார். கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது காங்கிரஸ் வேட்பாளராக ப.சிதம்பரம் போட்டியிட்டார். தேர்தலுக்குப் பிறகு அவர் காங்கிரசுடன் சனநாயக பேரவையை இணைக்கத் திட்டமிட்டார்.

ஆனால் இணைப்பு நிகழ்ச்சி தாமதமாகி வந்தது. புதிய அரசின் வரவு செலவுத்திட்டம் தாக்கல், மராட்டிய தேர்தல் போன்ற காரணங்களால் இணைப்பு விழா தள்ளிப்பேரனது. இந்த நிலையில் வருகின்ற 25 ஆம் திகதி டில்லியில் இணைப்பு விழா நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடு கள் நடந்து வருகிறது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி முன்னிலை வகிக்கிறார். சோனியா காந்தியின் இல்லத்தில் இந்த இணைப்பு நிகழ்ச்சி நடக்கிறது. விழாவில் ப.சிதம்பரம் மற்றும் காங்கிரஸ் சனநாயக பேரவையைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் 75 பேர் கலந்து கொளகிறார்கள்.

# 8 மாநிலங்களில் காங்கிரஸ் தலைவர்கள் மாற்றம்

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவையில் விரைவில் மாற்றம் செய்ய பிரதமர் மன்மோகன்சிங் திட்டமிட்டிருகிறார். அமைச்சரவை மாற்றத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியை மேலும் வலுப்படுத்தும், நடவடிக்கையை மேற்கொள்ளவும் காங்கிரஸ் மேலிடம் முடிவுசெய்துள்ளது.

இதற்காக சில மாநிலங்களில் காங்கிரஸ் கட்சித் தலைமையை மாற்றி அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

அரியானா, பீகார், ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், சதீஷ்கார், மேற்கு வங்காளம், இமாசலப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய 8மாநிலங்களில் காங்கிரஸ் தலைவர்களை மாற்ற மேலிடம் ஆலோசித்து வருவதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த 8 மாநிலங்களில் சில மாநிலங்களில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டசபைத் தேர்தல் நடக்கவிருக்கிறது. இதைத் தொடர்ந்து கட்சியின் செல்வாக்கையும் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும் நடவடிக்கையாக கட்சி மேலிடம் இப்போதே மாறுதல் நடவடிக்கையை தொடங்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவராக இருக்கும் ஜி.கே.வாசன் மத்திய அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்பதால் அவருக்குப் பதில் புதிய தலைவர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டில்லி, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே காங்கிரஸ் தலைவர்கள் மாற்றப்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிபு சோரனுக்கு மீண்டும் அமைச்சர் பதவி

ஜார்க்கண்ட்முக்தி மோர்ச்சா தலைவர் சிபுசோரன் கடந்த சில மாதங்களுக்கு முன் கொலை வழக்கில் கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனது மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார். அவருக்கு மீண்டும் கேபினட் அமைச்சர் பதவி கொடுக்க பிரதமர் மன்மோகன் சிங் திட்டமிட்டுள்ளார். ஜார்கண்ட் மாநிலத்தில் விரைவில் சட்டசபைத் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்தத் தேர்தலில் காங்கிரசும், ஜார்கண்ட் முக்தி மோர்ச் சாவும் கூட்டணி அமைத்துப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளது. இந்தக் கூட்டணி அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக சிபுசோரனை மீண்டும் மத்தியில் கேபினட் அமைச்சராக சேர்த்துக்கொள்ள மன்மோகன்சிங் திட்டமிட்டிருக்கிறார்.

# ரயிலில் ஏறுவதற்காக நெரிசலில் சிக்குண்ட 05பெண்கள் பலி; 10பேர் கவலைக்கிடம்!

## -புதுடில்லி ரயில் நிலையத்தில் சம்பவம்



(புதுடில்லி)

புதுடில்லியில் ரம்ழானுக்குப் புறப்பட்டவர்கள் ரயிலில் ஏற முண்டியடித்ததால் ஏற்பட்ட நெரிசலில் மிதிபட்டு 05பெண்கள் பரிதாபமாக இறந்தனர். 10பேர் உயிருக்குப் போராடி வருகின்றார்கள்.

டில்லியில் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு ஜான்சாதரன் எக்ஸ்பிறஸ் ரயிலில் 3ஆவது பிளாட்பாரத்தில் புறப்படத் தயாராக நின்றது. பீகார் தலைநகர் பட்னா செல்ல இருந்த அந்த ரயிலில் ஏறுவதற்கு பயணிகள் முண்டியடித்தனர். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ரம்ழான் பண்டிகைக்குப் புறப்பட்டவர்கள். அதனால் நெரிசல் ஏற்பட்டுப் பெண்கள் கீழே விழுந்தனர். அவர்கள் மீது மற்றப் பயணிகள் மிதித்துச் சென்றனர். ரயில்வே பொலிசார் படுகாயமடைந்தவர்களை மருத்துவ மனைக்குத் தூக்கிச் சென்றனர். வழியிலேயே 05பெண்கள் இறந்தனர். படுகாயமடைந்த 10 பேருக்கு மருத்துவமனையில் தீவிரசிகிச்சை அளிக்கப்படுகின்றது. அவர்கள் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளன. அது பற்றிப்பொலிஸ் அதிகாரியொருவர் கூறுகையில், கூட்டம் கட்டுக்குள் அடங்காது இருந்தது. ரயில் அதிகாரிகளும், பொலிசாரும் இருந்தும் சமாளிக்க முடியவில்லை. நெரிசலில் பலர் தடுமாறிக் கீழே விழுந்தனர் என்றார்.

மேலும் விபத்துப்பற்றி விசாரிக்க உயர்மட்டக்குழு விசாரணைக்கு ரயில்வே அமைச்சர் லல்லுப் பிரகாத் உத்தரவிட்டார். தீபாவளி, ரம்ழான். பண்டிகை காரணமாக டில்லி ரயில் நிலையத்தில் 70ஆயிரம் பேர் குவிகிறார்கள். இது வழக்கத்தை விட இருமடங்கு ஆகும். அதனால் கூட்டத்தைச் சமாளிப்பது கடினமாக இருந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காஞ்சி மடாதிபதிக்குப் பிணை வழங்க உயர் நீதிமன்றம் பின்னடிப்பு!

## -நீதிமன்ற வளாகத்தில் பெரும் மோதல்

(சென்னை)

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இந்து முன்னணியினருக்கும், மற்றத் தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் வக்கீல் உட்பட பலர் காயம் அடைந்தனர்.

சென்னை உயர்நீதிமன்றில் ஜெயேந்திரரின் பிணை மனு நேற்று முன்தினம் நீதிபதி ஆர். பால சுப்பிரமணியன் முன்பு விசாரணைக்கு வந்தது. பகல் 11.30 மணி முதல் 12.10 வரை சட்டத்தரணிகள் வாதம் நடந்தது.

பிணை மனு மீதான விசாரணையைப் பார்க்க இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களும், புரட்சி மாணவர் இளைஞர் முன்னணி, புதிய சனநாயக தொழிலாளர் முன்னணி, மக்கள் கலை இலக்கிய கழகம் போன்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றுள்ளும், வெளியிலும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

ஜெயேந்திரருக்கு வீட்டுக்காவல் அல்லது பிணை கிடைக்கும் என்று இந்து முன்னணியினர் எதிர் பார்த்தனர். ஆனால் மனு மீதான விசாரணையை புதன் கிழமைக்கு நீதிபதி தள்ளி வைத்தார் என்று அறிந்த இந்து முன்னணி மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களும், மடத்தின் அனுதாபிகளும் நீதிமன்றத்திற்கு எதிராகக் கோஷமிட்டனர்.

இதற்கு சட்டத்தரணிகளும், எதிர்த்தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தச் சூழ்நிலையில் சட்டத்தரணி கண்ணதாசன் தாக்கப்பட்டார். இதை அறிந்த சில சட்டத்தரணிகள் பார்வையாளர்களாக வந்த இருவரை அடித்துத் தாக்கினார்கள். பின்பு பொலிசார் அனைவரையும் கலைந்து செல்லும்படி தெரிவித்தனர்.

ஆர்.எஸ்.எஸ் சமுகவிரோத கூடாரமான சங்கர மடத்தை மூடவேண்டும். கிரிமினல் கூடாரமான



காஞ்சிமடத்தை இழுத்துமூடி சீல் வைக்க வேண்டும், கொலைக் குற்றத்திற்காக சிறையில் உள்ளவர்களுக்குச் சலுகை வழங்கக்கூடாது என்று வாசகங்கள் அடங்கிய வாசக அட்டைகளைச் சிலர் கையில் வைத்துக் கோஷமிட்டனர். இந்தச்சமயத்தில் கலக்ரர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திவிட்டு கொடிக்கம்புடன் வந்த இந்து முன்னணியினர் அங்கு வாசக அட்டைகளை கையில் வைத்திருந்தவர்களை கம்பால் தாக்கினார்கள். இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் கல் வீசியும் தாக்கினார்கள். இதில் ஒருவர் காயமடைந்தார். இதை அறிந்த பொலிசார் விரைந்து வந்து கூட்டத்தினரைக் கலைத்தார்கள். இந்தச்சம்பவத்தால் உயர் நீதிமன்ற வளாகத்தில் பதட்டநிலை ஏற்பட்டது. இந்தச்சம்பவத்தில் இரு சட்டத்தரணிகள் காயமடைந்தனர்.

# எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயார்

## சவால் விடுகிறார் தென்னாபிரிக்க பயிற்சியாளர்

சிமெண்ட் தரையால் ஆன பிட்ச் ஆனாலும் சரி, மணலால் ஆன பிட்ச் ஆனாலும் சரி எதையும் எதிர்கொள்ளத் தயார் என தென்ஆபிரிக்க பயிற்சியாளர் ஜென்னிங்ஸ் சவால் விடுத்துள்ளார்.

எரிக் சைமன்ஸிடம் இருந்து, தென்ஆபிரிக்க அணியின் பயிற்சியாளராக கடந்த மாதம் பொறுப் பேற்றுக்கொண்டார் ஜென்னிங்ஸ். 50 வயதாகும் இவர் முன்னாள் தென்னாபிரிக்க அணியின் விக்கெட் கீப்பர் மற்றும் துடுப்பாட்டவீரருமாவார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியா அபார வெற்றிபெற்றது. இது குறித்து பல்வேறு சர்ச்சைகள் நிலவி வருகின்றன. ஆனால் அம்மாதிரியான தரக்குறைவான பிட்ச்களிலும் இந்தியாவை நாங்கள் எதிர்கொள்ள முடியும். அத்துடன் தங்களது சொந்த மண்ணில்கூட சரியாக விளையாட முடியாத மனப்பான்மையை இந்திய வீரர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

விளையாடப்போகும் 'பிட்ச்' கட்டாந்தரையாகவோ அல்லது மணலாகவோ இருந்தாலும் அத்தடையை தாண்டி வெற்றி காண எங்களது வீரர்கள் தயாராக உள்ளனர். துடுப்பாட்டத்தின் போது இரு அணியினருக்கும் நிர்ப்பந்தம் இருக்கும். யார் அதிகமான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறார்கள் என்பது தான் முக்கியம். எதிரணியினர் எவ்வளவு மோசமாக ஆடி விக்கெட்டைப் பெற்றாலும்கவலையில்லை. அதை எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.



மனரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், பயிற்சியாளர் பணியை சிறப்பாக செய்த நிறைவுடன் ஆட்டம் முடிந்ததும் செல்வேன். ஏதாவது தவறாக நடந்துவிட்டால் மனரீதியாகவோ அல்லது தொழில்நுட்ப ரீதியாகவோ பலவீனம் என்பதை ஒப்புக்கொள்வேன். அதற்கு இந்திய கிரிக்கெட்டையும் அவர்களது அணியும் எவ்வாறு நிர்ப்பந்தம் அளிக்கப் போகிறது என்பதைக் காணவும் ஆவலாக உள்ளேன்.

ரசிகர்கள் அதிகம் எதிர்பார்க்கும் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டத்தை மங்கச் செய்யும் விதமான திட்டத்தையும் கொண்டுள்ளோம்.சச்சினுக்கு எதிராக எப்படி ஆடுவது என்ற வித்தையுடன் வந்துள்ளோம். ஆனால் அதை இப்போது கூறமுடியாது. பந்து வீசத் தொடங்கும் போது அவருக்கான நிர்ப்பந்தம் தெரியவரும். அதேசமயம் நாங்கள் துடுப்பாடும்போது அவர்களால் எங்களுக்குச் சில நிர்ப்பந்தமும் இருக்கக் கூடும் என்றார் ஜென்னிங்ஸ்.

# அவுஸ்திரேலியாவின் தந்திரத்தை கையாண்டு

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்தொடரை கைப்பற்றுவோம்




இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற தொடரில் அவுஸ்திரேலியா கையாண்ட தந்திரத்தைப் பயன்படுத்தி இந்தியாவுடனான 2டெஸ்ட் தொடரில் வாகை சூடுவோம் என தென் ஆபிரிக்க அணித் தலைவர் கிரேம்ஸ்மித் கூறியுள்ளார்.

இந்திய வம்சாவழி வீரர் ஹசிம்அம்லா உள்ளிட்ட 14 பேர் அடங்கிய தென்ஆபிரிக்க அணி வெள்ளிக்கிழமை காலை மும்பை வந்தடைந்தது.

இந்தியாவுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் தென் ஆபிரிக்க அணி விளையாட உள்ளது. முதல் போட்டி கான்பூரில் வரும் 20 முதல் 24 ஆம் திகதி வரையிலும், இரண்டாவது போட்டி வரும் 28 முதல் டிசம்பர் 2 வரை கொல்கத்தாவிலும் நடைபெற உள்ளன.

மும்பை விமான நிலையத்தில் குழுமியிருந்த நிருபர்களிடம் ஸ்மித் கூறியதாவது.உலகின் தலை சிறந்த அணியான அவுஸ்திரேலியா .வகுத்த திட்டத்தாலும் பொறுப்புடனும் விளையாடி இந்தியாவுடனான தொடரை 2-1 எனக் கைப்பற்றிச் சென்றது.கில்கிறிஸ்ட் தலைமையிலான அந்த அணியினர் மேற்கொண்ட சில தந்திரங்களை நாங்களும் கடைப்பிடித்து கடினமான இந்திய சூழலில் வெற்றி காண்போம்.

இளம் வீரர்களுடன் பெரும்பாலும் அனுபவிமில்லாத அணியே இந்தியா வந்துள்ளது. ஆனால் போட்டிக்காக தென் ஆபிரிக்காவில் மேற்கொண்ட பயிற்சி,சுவாரஸ்யமான ஆட்டத்தைத் தரும் என உறுதி கூறுகிறேன். இந்தியாவில் இந்தியாவுடன் விளையாடுவது கடினம். தென் ஆபிரிக்காவிலோ அல்லது அவுஸ்திரேலியாவிலோ விளையாடுவதைக் காட்டிலும் மாறுபட்ட சூழலைக் கொண்டது. இந்தியா. ஆனால் அணியில் மிகவும் துடிப்பான இளம் வீரர்கள் உள்ளதால் இத்தொடர் நிச்சயம் இருஅணிகளுக்குமே சுவாரஸ்யமாகஇருக்கும்.



# மாலிக், சல்மான் பட்டின் சிறப்பாட்டம் எமக்கு வெற்றிபெற உதவியது

## இன்சமாம்

292 ஓட்டம் என்பது நல்ல ஸ்கோர்தான், சாயிப் மாலிக்கும், சல்மான்பட்டும் தொடக்கத்திலேயே சிறப்பாக ஆடியதால் வெற்றிபெற முடிந்தது. இவ்வாறு பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சாமம் உல்-ஹக் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து 3 ஆட்டத்தில் வெற்றிபெற்று இருந்தது. இதனால் எங்களுக்கு மன ரீதியாக சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. ஹர்பஜன்சிங் நல்ல பந்துவீச்சாளர் என்றாலும் கும்ளேஆடாதது எங்களுக்குச் சாதகமே. பாகிஸ்தான் அணியின் நிலை. நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. இதற்கு பயிற்சியாளர் பாப் உல்மர் காரணமாவார். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

தோல்வி குறித்து இந்திய அணித்தலைவர் கங்குலி தெரிவிக்கையில்;

292ஓட்டம் என்பது நல்ல இலக்குதான். ஆனால் பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடி வெற்றிபெற்றுவிட்டது. எங்களைவிட பாகிஸ்தான் வீரர்களின் ஆட்டம் அபாரமாக இருந்தது. ஆட்டத்தின் எந்தக் கட்டத்திலும் எங்களுக்கு வெற்றிபெறும் சூழ்நிலை ஏற்படவில்லை.நாங்கள் களத்தடுப்புச் செய்தபோது அதிக பனித்துளி இருந்தது. இது தோல்விக்குக் காரணம் என்று நான் கருதவில்லை. மொத்தத்தில் நாங்கள் பாகிஸ்தான் அணியால் வெளியேற்றப்பட்டோம். பவள விழா போட்டிக்கு தலைவராக இருந்தது பெருமை அளிக்கிறது. இவ்வாறு கங்குலி கூறினார்.

# இந்திய அணித் தலைமையில் மாற்றம் வேண்டும்; மார்க்வோவின் கருத்தால் கவலையடையவில்லை

இந்திய அணித் தலைமையில் மாற்றம் தேவை என்று அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் மார்க்வோ கூறிய கருத்தினால் கவலைப்படவில்லை என்று இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறினார்.

அவரவர் கருத்தை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு முன்னாள் வீரர்களுக்கு உரிமை உண்டு. அதற்காக அவர்களுக்கு நான் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அண்மையில் வெளியான 'த வீக்' சஞ்சிகையில் கங்குலி கூறியுள்ளதாவது;

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரர்கள் உட்பட அனைவரும் மோசமாக ஆடியதை ஒப்புக்கொள்கிறேன்.




நம்முடைய வீரர்கள் அதிக ஓட்டங்களை எடுக்காதது ஏமாற்றத்தை அளித்தது. ஆனால், மும்பையில் நடந்த கடைசிப் போட்டியில் ஒரு சில வீரர்கள் நல்ல திறமையுடன் விளையாடினர். எஞ்சிய வீரர்களும் திறமையாக ஆடுவதற்கு நல்ல பயிற்சியை மேற்கொள்வர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

நாங்கள் திட்டமிட்டுத்தான் விளையாடினோம். ஆனால், அது அவ்வளவாக எடுபடவில்லை. இது கிரிக்கெட் ஆட்டத்தில் நிகழக்கூடியதுதான்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஆடிய இந்திய அணியில் வீரர்களைத் தேர்வு செய்ததில் எந்தவித பிரச்சினையும் இல்லை. தேர்வுக் குழுவில் திறமையான முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் இருந்தனர். அணித் தேர்வில் எவ்விதக் குறைபாடும் கிடையாது என்கின்றார் கங்குலி.



# விளையாட்டு

## மேசைப்பந்து போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டோர் யாழ். மாவட்ட விளையாட்டு துறையால் கௌரவிப்பு

இந்தியாவில் இடம் பெறவுள்ள மேசைப் பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட வீர வீராங்கனைகள் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ் மாவட்டத்தினரால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் பணிமனையில் இடம் பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பொ.ஈஸ்வரன் தலைமை தாங்கினார்.

வீரர்களான ஆர். நிதர்சன் ஜே. மோகன் மற்றும் வீராங்கனைகளான எஸ்.சாரங்கி,எ.நிருஸ்யா, எஸ்.பானுரேகா. ஆர்.கஜந்தினி, ஆகியோரும் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

இந் நிகழ்வில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் தமிழீழ விளையாட்டுத்துறையைச சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனா. (41)

# ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் மற்றைய போட்டிகளுக்கு முன்னுதாரணம்

## ஒலிம்பிக் தலைவர் ரோச்

அடுத்து நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னுதாரணமாக எதென்ஸ் போட்டி அமைந்துள்ளது எனப் புகழாரம் சூட்டியுள்ளார் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் தலைவர் ஜாக்கஸ் ரோச்.

கடந்த ஆகஸ்ட் 13 முதல் 29 வரை கிரீஸ் தலைநகர் எதென்ஸில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. இதற்காக ஐ.ஒ.சி. தலைவர் ரோச் திரும்பத் திரும்ப அளித்த அறிவுறுத்தல்களாலேயே பணிகளை விரைந்து முடித்தோம் என எதென்ஸ் போட்டி அமைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், போட்டிக்கான பணிகளை உரிய நேரத்தில் செய்து முடித்ததில் பெருமையும் அடைகின்றோம் என ரொய்டர் நிறுவனத்திற்கு எதென்ஸ் போட்டி அமைப்புக் குழுவினர் தகவல் அளித்துள்ளனர்.

அதை அறிந்த ரோச் அடுத்தே போட்டியை நடத்த உள்ள பெய்ஜிங் அமைப்பாளர்களும், எதென்ஸையே முன்னுதாரணமாகக் கொண்டு, 2008 போட்டியைச் சிறப்பாக நடத்தி முடிக்க கூடுதல் நிர்ப்பந்தத்தை வகுத்துக் கொண்டுள்ளோம் எனக் கூறியுள்ளனர் என்றார் ரோச்.

இத்தகவலை கடிதம் மூலம் எதென்ஸ் போட்டி அமைப்புக் குழுத் தலைவர் கியானா ஏஞ்சலாபவுலோஸுக்கும் தெரிவித்துள்ளதாக ரோச் கூறியுள்ளார்.

இதற்கிடையே, இதுவரையில் இல்லாத அளவாக, எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு ரூ. 50 ஆயிரம் கோடி செலவாகியுள்ளதாக கிரேக்க அதிகாரி வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார். தொடக்க விழா நடைபெறுவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பாக அத்தொகையில் பாதியே செலவாகும் எனத்திட்டமிடப் பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# அணியிலிருந்து தான் நீக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவிக்கிறார் கட்டிச்

நியூசிலாந்து அணியுடனான போட்டிகளிலிருந்து தன்னை நீக்கியமைக்காக அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் சைமன் கட்டிச் கவலையடைவதாகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் பிறிஸ்பேனில் இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது.கட்டிச் இந்தியா சுற்றுப் போட்டியில் சிறப்பாக ஆடி அதிக ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கட்டிச் முன்னரும் அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். கடந்த மார்ச்சில் சிறிலங்காவுடனான டெஸ்ட் தொடரிலும் அவர் அன்ரு சைமனுக்கு வாய்ப்பை அளித்து விலகினார். கட்டிச் இந்தியா தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அணித்தலைவர்கள் கௌரவிப்பு



இந்திய கிரிக்கெட் (சபை பவள) விழா ஆண்டை முன்னிட்டு,இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர்கள் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டனர். முதல் பாதி ஆட்டநேர முடிவில் மைதானத்தில் பாராட்டு விழா நடந்தது.ஜாம்பவான்களுக்கு காஷ்மீர் சால்வை, வெள்ளிதட்டு மற்றும் சிறப்பு 'டை' ஆகியவை வழங்கப்பட்டன.

பரிசுகளை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில்தத், மேற்கு வங்க விளையாட்டுத்துறை அமைச்சர் சுபாஷ் சக்கரவத்தி வழங்கினர். தற்போதைய பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் முதல் ஆளாகப் பரிசை பெற்றுக் கொண்டார். இவருக்கு அடுத்ததாக சச்சின்,செவுரவ் கங்குலி மற்றும் ராகுல் ராவிட் ஆகியோர் பரிசு பெற்றனர்.



## சிந்தனைக்கு

எந்தவொரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப் புறம்பாக நின்று, விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை; அது நடைமுறைச்சாத்தியமான காரியமுமல்ல

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பயன் எனக்கு, பாவம் உனக்கு

“அநியாயத்திற்குத் துணைபோகத் தயார். ஆனால் பாவத்தில் பங்கேற்கமாட்டோம்” என்பது போன்றுள்ளது ஜே.வி.பி.யின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு. இதனை வெளிப்படுத்துவது போன்றதே “கூட்டமைப்பு அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காக நிபந்தனையுடன் ஆதரவு அளிப்பது பற்றி ஜே.வி.பி இப்பொழுது பரிசீலனை செய்துவருகின்றது” என்ற ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் கூற்றுக்கள்.

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தினால் அதன் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்பது ஜே.வி.பிக்கு நன்கே தெரியும். இது தற்பொழுதல்ல தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவை முன்வைக்கப்பட்டபோதே தெரிந்ததொன்றுதான். ஆனால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சனாதிபதி சந்திரிகாவுடன் சேர்ந்து ஜே.வி.பி.யும் மக்களை ஏமாற்றியது.

இதன்மூலம் ஆட்சிக்கு வந்து அமைச்சுப் பொறுப்புக்களையும் பங்கீடு செய்த பின்னர் அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்பது போல்ஜே.வி.பி நடந்துகொள்ளப் பார்க்கின்றது. அதாவது சுகத்தில் மட்டும் பங்கு, பாவம், பழி அனைத்தும் உனக்கு என்பது போல் அது நடந்துகொள்ளப் பார்க்கின்றது.

இந்தநிலையில், தற்பொழுது சனாதிபதித் தேர்தல்கள் பற்றி பிரஸ்தாபிக்கப்படத் தொடங்கியுள்ள நிலையில் ஜே.வி.பி. இன்னமும் அரசாங்கத்தில் இருந்து விலத்தியிருப்பது போன்றதொரு தோற்றப்பாட்டையும், அரசாங்கத்திற்கு கொள்கை அடிப்படையில் மட்டுமே ஆதரவு வழங்குவது போன்றதொரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்த ஜே.வி.பி. முற்பட்டு நிற்கின்றது.

ஜே.வி.பி.யின் இந்நிலைப்பாடு கூட்டணி அரசாங்கம் என்பதற்கு புதியதொரு அர்த்தத்தைக் கொடுப்பது போன்றதாகிறது. அதாவது, ஆளும் கூட்டணியில் இடம்பெறும் கட்சி ஒன்று தன்னை எதிர்க்கட்சி போன்று அடையாளப்படுத்திக் கொள்ளமுற்பட்டு நிற்கின்றது. இதன் மூலம் அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயற்பாடுகளில் தமக்குப் பங்கில்லை எனக் காட்டிக்கொள்ளவும், தூய்மையைப் பேணவும் விளைகிறது.

அதிலும், தற்பொழுது தெளிவானதொரு வேறுபாட்டை ஜே.வி.பி. வெளிப்படுத்த முற்பட்டு நிற்பதானது அடுத்த சனாதிபதித் தேர்தலைக் குறி வைத்ததே ஆகும். அதாவது, “அடுத்த சனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்துதல் அன்றி சனாதிபதி சந்திரிகாவிற்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பெரும் பேரத்துடன் ஒத்துழைப்பை வழங்குதல் என்பதாகும்.

ஆனால், தற்பொழுது ஜே.வி.பி. வெளியிடும் அறிவிப்புக்கள் சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்தே போட்டியிடப் போவதானதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதாகவே உள்ளன. “அடுத்த சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தமது வேட்பாளர் தோற்கடிப்பார் என்ற ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் கூற்றுக்கள் ஜே.வி.பி. தோற்றுவிக்க முனையும் சூழ்நிலையின் வெளிப்பாடாகும்.

ரில்வின்சில்வாவின் இக்கூற்றுக்கள் ஜே.வி.பி. அடுத்த சனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளரை நிறுத்தும் என்பதினால் மட்டுமல்ல, வேறு ஒருவகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது ரணில் விக்கிரமசிங்கவைத் தமது கட்சி வேட்பாளர் தோற்கடிப்பர் என்பதினாலும் இது முக்கியம் பெறுகிறது. ஏனெனில், இக்கூற்றுக்களினால் மற்றொரு கேள்வியும் எழுவதாகிறது.

அதாவது ரணில் விக்கிரமசிங்க தவிர சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்திரிகா குமாரதுங்கவையோ அன்றி அவரது வேட்பாளரையோ ஜே.வி.பி தோற்கடிக்குமா? என்பதேயாகும். ரணிலை ஜே.வி.பி.யின் வேட்பாளர் தோற்கடிப்பதாயின் ஜே.வி.பி சனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவது அவசியமானதாகும்.

ஆகையினால் ஜே.வி.பி. ரணிலை எதிர்த்துப் போட்டியிடுவதானால் சந்திரிகா குமாரதுங்கவையோ அன்றி அவரது வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடுவதும் அவசியமானதாகும். ஆனால் ரணில் தமது வேட்பாளரைத் தோற்கடிப்பார் எனக்கூறிய ரில்வின்சில்வா சந்திரிகாவையோ அன்றி அவரின் வேட்பாளரையோ போட்டியில் தோற்கடிப்பதாகக் கூறவில்லை. அவ்வாறானால் ஜே.வி.பி சனாதிபதித் தேர்தலில் இரண்டாவது இடத்திற்குப் போட்டியிடப் போகின்றதா? அன்றி சந்திரிகாவையோ அல்லது அவரின் வேட்பாளரையோ தோற்கடிப்பது பற்றிப்பேச வேண்டிய தேவை இல்லை, அவர்களைத் தோற்கடிக்கும் ரணிலைத் தோற்கடிக்கப் போவதாகக் கூறுகின்றதா?

எது எவ்வாறாயினும் சனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கி ஜே.வி.பி காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டது. இதற்காகத்தான் கறைபடியவில்லை என அது காட்ட விளைகின்றது. ஆனால் ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் எதிர்க்கட்சியாகக் கொள்வதில்லை என்பதை ஜே.வி.பி மறந்து போய்விட்டமைதான் துரதிர்ஷ்டமானது.

# விகிதாசார தேர்தல் முறை அமைதியை சீர்குலைக்கின்றது

### -ஐ.தே.க.பா.உ அமராபியசிறிரத்நாயக்க

தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார வாக்கெடுப்பு முறையானது அமைதியையும், பரஸ்பர சக வாழ்வையும் சீர்குலைப்பதாக அமைந்துள்ளளதென ஐ.தே கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அமராபியசிறிரத் நாயக்க தெரிவித்துள்ளார். எனவே தேர்தல் முறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை தான் வரவேற்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றங்களை செய்வது தொடர்பாக பவ்ரல் அமைப்பினரால் முன்மொழியப்பட்ட யோசனைகளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்காக கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்றைய தேவைகளுக்கு ஏற்ப தற்போதைய தேர்தல் முறை மாற்றப்பட வேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமென அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் முறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குகின்றது. அத்துடன் தேர்தலில் தனி ஒரு அரசியல் கட்சி மூன்றில் ஒரு பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையில் உள்ளதென அவர் சுட்டிக்கட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### -ஆயுதத்துக்கு பணம் வழங்கும் நடவடிக்கையில்-

# 30 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்களில் 120 ஆயுதங்கள் மட்டும் ஒப்படைப்பு

(கொழும்பு)

30,000 சட்ட விரோதமான ஆயுதங்கள் நாட்டில் பாவிக்கப்படுகிறதென்றும் அண்மையில் அரசாங்கம் ஆயுதங்களை வழங்கினால் அதற்குரிய பணத்தொகையை செலுத்துவதாக அறிவித்தும் 120 ஆயுதங்கள் மட்டுமே அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை தற்பொழுது கையளிக்கப்பட்டுள்ள ஆயுதங்களுக்கு இதுவரை பணம் வழங்கப்படவில்லை என்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சின் அறிவுரையின் படி பணம் செலுத்தப்படும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

# அரிசி, சீனி, பருப்பு இறக்குமதி தனியார் துறையிடம் ஒப்படைப்பு

அரிசி, சீனி, பருப்பு போன்ற உணவுப்பொருட்களின் இறக்குமதியை தனியார் துறையிடம் ஒப்படைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கு அமைச்சரவை முழு அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

முதன் முதலாக அரிசி இறக்குமதியை விக்கிரமரத்ன சகோதரர்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் குறைந்த விலைக்கு விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முதலிடம் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொலிசாரின் சூட்டில் பெண் பலி பொலிஸ் நிலையம் மீது மக்கள் தாக்கு

இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம் பெண்ணொருவர் கொல் லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த பொதுமக்கள் நேற்று நண்பகல் உடவளவை பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிளில் சென்ற இப்பெண்ணை பொலிசார் சோதனைக்காக நிறுத்திய சமயம் அதனை மீறிச்சென்ற போது இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் பொலிசாருக்கு எதிராக நேற்று வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்த பின்பு உடவளவை பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டனர். இவர்களை கலைப்பதற்காக பொலிசாரினால் கண்ணீர்ப் புகையும் அடிக்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசார் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது ஒருபுறமிருக்க கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரணகுணவர்தனாவின் இல்லம் மீது இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து இவரது வீடு சேதமடைந்துள்ளது. இது அரசியல் வன்முறை என பொலிசார் தெரிவித்தனர். (32)

# பாணந்துறையில் குழுமோதலில் இரு இளைஞர்கள் பலி

கொழும்பின் புறநகர் பாணந்துறை நகரில் நேற்று இடம்பெற்ற கலவரங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இசை நிகழ்ச்சி ஒன்றின் போது இடம்பெற்ற கலவரங்களிலேயே இந்த கொலைகள் இடம்பெற்றுள்ளன. பொலிசாரின் அனுமதியின்றி ஒழுங்கு செய்யப்பட்ட இந்த இசை நிகழ்ச்சியின் போது இரண்டு குழுக்களிற்கிடையில் இடம்பெற்ற மோதலின் போது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். இதனையடுத்து கோபமடைந்த பிரிவினர் வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அந்த வீட்டை எரியூட்டியதுடன் அங்கிருந்த இளைஞர் ஒருவரையும் கொலை செய்தனர். (32)

# லஞ்ச ஊழலைக் கட்டுப்படுத்த அரச ஊழியர் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

நாட்டின் சட்டம் ஒழுங்கு லஞ்சம், துஷ்பிரயோகங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு நாட்டில் அரச திணைக்களம் கூட்டுத்தாபனம் ஊழியர்கள் அனைவரும் சனவரி மாதம் 3ஆம் திகதி சத்தியப் பிரமாணங்களை மேற்கொள்ள வேண்டும் என அரச திணைக்களக் கூட்டுத்தாபன தலைவர்களுக்கு லஞ்ச ஊழல் ஆணைகள் திணைக்களம் சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளது.

இதனால் அரச உடமைகள் பாதுகாப்பு அதிகரிப்பதுடன் தேவையற்ற விதத்தில் இந்த உடமைகள் பாவிப்பது தவிர்க்கப்படும் என லஞ்ச ஊழல் ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கொடிகாமத்தில் இடம்பெற்ற விபத்து




படையினரால் விபத்து நடத்த இடத்துக்கு அருகே நீர் நிலையினுள் வீசப்பட்டுள்ள விபத்தில் சிக்கிய உந்துருளியையும், விபத்தில் தொடர்புடைய இராணுவ நீர்த்தாங்க வண்டியையும், விபத்தில் பலியான இளைஞனின் தந்தை மற்றும் சகோதரனையும் படங்களில் காணலாம்.

### நீதித் துறையின் ஊழல் தொடர்பான

# சனாதிபதியின் உரைக்கு எதிராக சட்டத்தரணிகள் போர்க்கொடி

(கொழும்பு)

இலங்கையில் சட்டத்தரணிகள் சங்கம் சனாதிபதிக்கு எதிராக குரல் எழுப்பியுள்ளது. அண்மையில் சனாதிபதி நாட்டின் பொலிஸ்துறையும் நீதிமன்றங்களுமே குற்றவாளிகளின் பாசறைகளாக இருந்து வருவதாக குற்றம் சுமத்தியிருந்தார். இதனை பின்னர் பொலிஸ்மா அதிபரும் ஏற்றுக்கொண்டிருந்தார். இந்த நிலையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முன்தினம் தமது நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தை நடத்திய போது நீதிமன்றத்துக்கு எதிராக சனாதிபதி தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது. தமது துறையில் சிலர் மேற்கொள்கின்ற குற்றங்களுக்காக அனைத்து நீதிமன்றங்களையும் சனாதிபதி குற்றம் சுமத்துவது பொருத்தமற்றது என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தமது துறையில் எவர் குற்றவாளிகளுக்கு உதவினார் என சனாதிபதி குற்றம் சுமத்துகிறாரோ அவர்களின் பெயர்ப் பட்டியலை அவர் தமது சங்கத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சட்டதரணிகள் சங்கம் சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதனை விடுத்து எழுந்தமானமாக குற்றம் சுமத்துவதானது நீதித்துறையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை தகர்த்து விடக்கூடும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (32)

# ஈ.பி.டி.பி.உறுப்பினர் வெளியேற்றம் டக்ளஸ் ஏற்றுக் கொள்கிறார்

ஈ.பி.டி.பி.யிலிருந்து முக்கியஸ்தர்கள் சிலர் வெளியேறி வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார்கள் என்பதை டக்ளஸ் தேவானந்தா மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த வெளியேற்றம் குறித்து இங்குள்ள ஊடகமொன்றிற்கு நேற்று அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜெகன், நிசாந்தன், பாஸ்கரன் ஆகியோர் விடுமுறையில் வைத்திய தேவைக்காக போயுள்ளார்கள். அவர்கள் விரும்பினால் விலகலாம் அல்லது சேரலாம் இது அவர்களுக்கு மட்டுமல்ல பொதுவாக ஈ.பி.டி.பி. நிலைப்பாடு எனத் தெரிவித்துள்ளார். இவர்களில் ஜெகன் எனப்படும் கே.வி.குகேந்திரன் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் என்பதும், ஜி.பாஸ்கரன் அற்புதன் படுகொலையின் பின்பு தினமுரசு ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதும், நிசாந்தன் எனப்படும் எஸ்.மணிபல்லவராஜா, முன்னாள் நல்லூர் பிரதேச சபை தலைவர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.இவர்களைத் தவிர டக்ளஸிற்கு ஒரு காலகட்டத்தில் மிக நெருக்கமானவராக இருந்த மதனராஜா உள்ளிட்ட வேறு பலர் கருத்து முரண்பாடுகளால் ஏற்கனவே ஒதுங்கியிருப்பதாகவும், அவர்கள் கூட விரைவில் நாட்டைவிட்டு வெளியேறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மதன், ஜெகன், பாஸ்கரன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாக கடந்த காலத்தில் இருந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறானதொரு நிலையில் டக்ளஸின் வேறு சில செயற்பாடுகள் ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர்களால் தற்போது காரசாரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஈ.பி.டி.பி.யின் கொழும்பு அலுவலகத்தில் முக்கிய விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி.யிலுள்ள பெண்மணியொருவருக்கு பல கோடி பெறுமதியான வீடு ஒன்றைக் கொழும்பில் வாங்கிக் கொடுத்தமை மற்றும் தனது தனிப்பட்ட நெருங்கிய தோழிக்கு கொழும்பில் இரண்டு வீடுகளை வாங்கிக் கொடுத்தமை ஆகியனவே ஈ.பி.டி.பி.யின் முக்கிய செயற்பாட்டாளர்களால் ஏனைய உறுப்பினர்களுக்குத் விபரமாகத் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

## சமாதான...

ஜி.எல் பீரிஸிடம் வலியுறுத்தலை விடுத்திருந்தார். இதே வேளை ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக அரசாங்கம் தற்சமயம் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதன் மூலமும் ஐக்கிய தேசிய கட்சிக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்து வருகிறது. அண்மையில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கவிற்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தின் முன்னாள் சமர்பிக்கப்பட்டுள்ளமையும் இதில் ஒரு கட்டமாகும் இவ்வாறு தம் கட்சிமீது அரசாங்கம் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருமாகவிருந்தால் அது கட்சியின் கீர்த்திக்கு பாதகத்தை கொண்டு வரும் என்பதால் ஐக்கிய தேசிய கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாவிட்டாலும் கூட, சனாதிபதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபையில் ஏதாவது காரணத்தைக் காட்டி அங்கம் வகிக்க முற்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. (32)

# சமாதான சூழலிலும் இராணுவம் பலம் பெற்றிருப்பது சிறந்தது

### இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட

சமாதான சூழ்நிலையிலும் இலங்கை இராணுவம் பலம் பெற்றிருப்பது இராணுவ நலன்களுக்கு சிறந்தது என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார் சமாதான சூழ்நிலையில் இராணுவம் தம்மை பலப்படுத்தி வருவது அது போர் ஒன்றுக்கு தயாராகி வருவதாகவும்,இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள முனைவது அதன் ஒரு கட்டமே எனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். எதிர்வரும் வரவு செலவு திட்டத்திலும் இராணுவ நலன்களுக்கு பாரிய நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்துகின்றனர். இதற்கு பதிலளித்துள்ள இராணுவ தளபதி, இராணுவத்தின் மனோதிடத்தை ஒருமுகப்படுத்துவதற்கு அதற்கு பயிற்சிகள் அவசியமானதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இராணு வத்துறை ஒரு தொழில் துறை என்ற விடயமும் இங்கு கருத்திற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார் (32)

# வட கிழக்கு ஆளுனராக டிரோன்பர்னாண்டோ

முன்னையஐக்கியதேசியக்கட்சியின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டிரோன் பர்னாண்டோஅடுத்த வடக்குக் கிழக்கு மாகாண ஆளுனராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாண ஆளுனராக உள்ள அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக டிசம்பர் முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார். டிரோன் பர்னாண்டோ இவ்வருடம் பாராளுமன்ற பொது தேர்தலில் போதியளவு வாக்குகளைப் பெறவில்லை இவர் கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படாததை அடுத்து ஐ.தே.கவில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொண்டார். அசோக ஜெயவர்த்தன. சிறில்கேரத்தின் இடத்திற்கு நியமிக்கப்பட அவரின் இடத்திற்கு டிரோன் பர்னாண்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஊடக...

களின் போது செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையினை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. தொடரும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் இலங்கை அரசு மீது தவறான பார்வையினைச் செலுத்த சர்வதேச சமூகத்திற்கு வழிகோலும் என்பதை உரிய தரப்புக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (27)

## இராணுவ...

எதிர்க்கட்சி அதனை கிழித்து நெருப்பு வைத்தது. வரலாற்று ரீதியில் நோக்கினால் இரு பிரதான கட்சிகளும் தமது அதிகாரத்தில் கவனம் காட்டுகின்றதே தவிர தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இது வரை எடுக்கவில்லை என்பது தான் உண்மை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ராணுவ...

யடுத்து அப்பகுதியிலிருந்து செல்ல முற்பட்டுள்ளது. அத்துடன் ஸ்தலத்தில் குறித்த இளைஞன் உயிரிழந்துவிட்ட நிலையில் அவரது உந்துருளியையும் அங்கிருந்து அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்நிலையில் அப்பகுதியில் திரண்ட நூற்றுக் கணக்கான மக்கள் கோபமுற்று வீதி மறியலில் ஈடுபட்டனர். கண்டி வீதியில் சம்பவம் இடம்பெற்ற பகுதியின் இருபுறமும் மரங்கள் மற்றும் ரயர்களைப் போட்டு தீயிட்டெரித்திருந்தனர். அத்துடன் கண்டி வீதியூடாகப் பயணித்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளையும் வீதிக்குக் குறுக்காகத் தடுத்து வைத்தனர்.

இதனிடையே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களில் சிலர் குறித்த இராணுவ நீர் தாங்கி வாகனத்தை தீயிட்டு எரிக்க முற்பட்ட நிலையில் படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு மக்களைக் கலைத்தனர்.

இதேவேளை, அசம்பாவிதத்தை அடுத்து அங்கு பெருமளவிலான பொலிசார் கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்தும் பொலிசார் ஸ்தலத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

மக்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதுடன், தடியடியிலும் ஈடுபட்டனர். பதிலுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களும் சாரமாரியாக பொலிசார் மீது கல் வீச்சுக்களை மேற்கொண்டனர். இக்கலவரங்களிற்கு மத்தியில் அங்கு தரித்து நின்ற பொலிசாரின் உந்துருளி ஒன்றும் தீயிடப்பட்டது.

இதேவேளை, இச்சம்பவத்தால் 8.30 மணியளவில் துண்டிக்கப்பட்ட கண்டி வீதியூடான போக்குவரத்து சுமார் நான்கு மணி நேரத்தின் பின்னரே சுமுக நிலையினை அடைந்தது. இந்நேர இடைவெளியினுள் மாற்றுப் பாதைகளினூடாகவே போக்குவரத்துக்கள் இடம்பெற்றது.

சுமுக நிலையினை ஏற்படுத்துவதில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினது பிரதிநிதிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடராஜா ரவிராஜ் மற்றும் சி.கஜேந்திரன் ஆகியோர் கடும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதேவேளை பொலிசார் இராணுவத்தினர் அடித்ததில் 5 பொதுமக்கள் காயமடைந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் காயமடைந்தவர்களை தூக்க முயற்சித்த போது இராணுவத்தினர் ஒருவர் அவரைத் தள்ளியுள்ளார். ஆவேசமடைந்த பொதுமக்கள் கல்லெறிந்தனர். அங்கு சென்ற கண்காணிப்புக்குழு வாகனத்துக்கும் கல்லெறி பிடித்துள்ளது. சம்பவம் நடைபெற்ற நேரத்தில் இருந்து (மு.ப 10.00 பி.ப 2.00) மணிவரை முறுகல் நிலை தொடர்ந்து இப்போது நிலைமை அமைதியாகிவிட்டது. கொட்டும் மழையின் மத்தியில் இடம் பெற்ற இவ் இழுபறிகளின் மத்தியில் சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி பதில் நீதவான் சி.கந்தசாமி மரணவிசாரணைகளின் பின்னர் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்க உத்தரவிட்டார். இதே வேளை கெடிகாமம் பொலிசாரால் கைது செய்யப்பட்ட தண்ணீர்த் தாங்கி சாரதியை விசாரணைக்கு உட்படுத்தவும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார். இவ் அசம்பாவிதங்களிடையே அங்கு செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர் மீதும் பொலிசார் மோசமான தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். தம்மை ஊடகவியலாளர் என அடையாளப் படுத்திய போதும் அவர்கள் தாக்கப் பட்டுள்ளனர். அத்துடன் ஈழநாதம் உள்ளிட்ட ஊடகங்கள் சிலவற்றின் செய்தியாளர்களது கமராக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் நீண்ட இழுபறிகளின் பின்னர் படங்கள் அழிக்கப்பட்ட பின்னர் கையளிக்கப்பட்டுள்ளது. (27,33,28)

## சமாதானத்...

இந்தத்தீர்ப்பை வழங்கவிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் அரசியல் யாப்பு குழப்பமானது. அதனை இல்லாமல் செய்ய வேண்டும். அதற்கு சனாதிபதி தயாராகி விட்டார். ஜே.வி.பி.யின் ஆதரவும் அதற்கு கிடைக்கும் என கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.